MUTRAM - Tamil & English Monhtly R.Dis No. 1678-2012
RNI No. TNBIL/2010/36924

"உளியின் அழகு சிலையிலே
உங்களின் அழகு
ராம் டெக்ஸ்டைல்ஸ் ஆடையிலே"

உங்கள் ராம்
டெக்ஸ்டைல்ஸ் A/c

நேரு வீதி, திண்டிவனம்.



மனிதமே முதன்மை!

# முற்றம்

பல்சுவை இதழ்

Mutram monthly April 2014

விலை : ரூ.10/- இல்லம் : 2 சுற்றம் : 6 ஆசிரியர் : விசவனூர் வே. தளபதி





## உங்கள் மீதான அடக்கு முறை ஏன்?

அம்பேத்கர் உரை



## பா.ச.க. தேர்தல் அறிக்கையும் இந்துத்துவாவும்


A.LOGANATHAN
98407 94142
ROYAL
WATERPROOFING
AUTHORIZED PIDILITE APPLICATOR
Pidilite
Royal waterproofing
✦ Epoxy Coating
✦ Damp Proofing
✦ Roof - Terrace
✦ A.C.Sheet
✦ All Painting Works
✦ Joint Sealents
✦ Structural Repairs
✦ Basement Water Tank
✦ Grounding
#63/22,1st Floor, Nelson Manickam Road, Choolaimedu, Chennai - 600094.
Cell : 99400 29577, Email - rwploga@gmail.com


M. Palani
Ph : 2446 1938
4301 8191
THE NEW HOBBY CENTRE
Aquarium, Fishes, Plants, Fish Food, Toys & Accessories
54/1, Mosque Complex, L.B. Road, Adyar, Chennai - 20

மனிதமே முதன்மை!

# முற்றம்

Mutram monthly April 2014

பல்சுவை இதழ்

ஆசிரியர்
**விசவனூர் வே.தளபதி.**
இணை ஆசிரியர்
அ.வெற்றிவேந்தன் எம்.ஏ., பி.எல்.,
உதவி ஆசிரியர்கள்
இமயவரம்பன் பி.எஸ்சி.,எம்.ஏ.,பி.எல்.,
அ. உமாமகேசுவரி எம்.ஏ.,
பி.எம்.பாலா
ஜெ. ராஜா சிங்,
ஜெய்
டேவிட் கிறிஸ்டோபர் ஆனந்த்
தலைமைச் செய்தியாளர்கள்
வே. வளையாபதி
த. ஞானமணி பி.எஸ்சி., பி.எட்.,
செய்தியாளர்கள்
பொன்முடி சிவகங்கை
வெ. இராஜ்குமார் எம்.ஏ., எம்.பில்.,
பெரியசாமி
க.ஏழுமலை எம்.ஏ., எம்.பில்.,
ச. உதயகுமார்
க. பவானி பி.ஏ.,
சிவக்குமார் மதுரை
ரஞ்சித் இமானுவேல்
பெ. அர்ஜுன்
சாதிக்பாட்சா கோவை
மு.கலைச்செல்வன்
அரக்கோணம் ராஜேஷ்
திருவள்ளூர் ஆனந்த்
லோகநாதன்
ஷாம் எர்னஸ்ட்

வடிவமைப்பு
எழில் வரைகலை
புகைப்படக்காரர்
இரமேஷ்
அலுவலக முகவரி
13/5 புத்தா தெரு, கோடம்பாக்கம் ,
சென்னை 600 024
அலைபேசி : 8056281973, 9444363917.
மின்னஞ்சல்:
mutram2010@gmail.com
இணைய தளம் :
www.mutram.in

## உள்ளே

பா.ச.க.
தேர்தல் அறிக்கையும்
இந்துத்துவமும்....................5

நெல்மணியின் தாய்
தமிழ்க் கொடி
*வேல் பொன்முடி*....................7

இலக்கணங்களின் வழி நிற்கும்
ஒப்பற்ற தமிழ்மொழி
*இயற்றமிழன்*.................... 8

இலங்கையில் தமிழர்
*முருகர் குணசிங்கம்*....................10

தேர்வு முடிவு
*த ஞானமணி*.................... 13

தமிழர்களின் தாகம்
தமிழ் ஈழம்
*ஜெ. இராஜசிங்*.................... 21

மாநிலங்களுக்கு கூடுதல்
அதிகாரம் தேவை
*அருணகிரி*.................... 26

மண்ணும் மொழியும்.................... 27

டிப்ரேசன் நோயால்
வாழ்க்கையை இழந்து தவிக்கும் இளைஞர்கள்............. 31

காசோலை, வரைவோலை
அனுப்புவோர் "mutram" என்ற கணக்கிற்கு
எடுத்தனுப்பலாம்.



வேதாளம் முருங்கை மரத்தில் ஏறிய கதையாக ராமர் கோயிலைக் கட்டுவோம் என்று பாரதிய சனதாக்கட்சி தேர்தல் அறிக்கையில் கூறியிருக்கிறது. அசாம், திரிபுரா வில் முதற் கட்டத்தேர்தல் நடக்கிற நாளில் தேர்தல் அறிக்கையை வெளியிடுகிற சுறுசுறுப்புத் திலகங்களாக பா ச க வினர் நடந்து கொண்டிருக்கிறார்கள்.

அரசியல் சட்டத்துக்கு உட்பட்டு அயோத்தியில் ராமர் கோயில் கட்டுவோம் என்று கூறப்பட்டிருக்கிறது. இப்போதுள்ள அரசியல் சட்டங்களுக் குட்பட்டா? அல்லது அவர்கள் இனிமேல் திருத்தம் செய்யப் போகிற அரசியல் சட்டங்களுக்கு உட்பட்டா என்பது தெரியவில்லை. தங்களுக்கு முசுலீம்களின் வாக்குகள் கிடைக்காது, ஆகவே இந்துக்களிடம் முசுலீம்கள் மீதான இன வெறுப்பை உண்டாக்கி, ஊதிப் பெரிதாக்கி, ஏமாறுகிற இந்துக்களின் வாக்குகளைப் பெற்று தாங்கள் ஆட்சி அதிகாரத்தில் அமர்ந்து கொள்ள வேண்டும் என்ற திட்டத்தைத்தான் செயல்படுத்தத் தொடங்கியுள்ளனர்.

ஏதோ ஒரு காலத்தில் தவறு செய்துவிட்டோம், இனிமேல் அவ்வாறு நடக்காமல், அனைவரும் சகோதரர்களாக வாழ்வோம் என்ற நல்லெண்ணம் சிறிதும் இல்லாமல் ராமர் கோவிலைக் கட்டுவோம்




# பா.ச.க.

# தேர்தல் அறிக்கையும் இந்துத்துவாவும்



என்பது தேச நலனில் புற்றுநோய் வந்தது போலத்தான்.

ராமர் கோவில் இருந்த இடத்தில் பாபர் மசூதி வந்தது. ஆகவே அதை அழித்துவிட்டு, ராமர் கோவில் கட்டுவோம் என்று வீராவேசம் பேசுகிற சூரர்கள், இலங்கையில் இந்துக்கோவில்களை எல்லாம் இடித்து விட்டு புத்த விகார்களைக் கட்டிக் கொண்டிருக்கும் சிங்களர்களுக்கு துணை போவது ஏன்? தங்களது எதிரிகளான காங்கிரசுக்காரர்களோடு இந்த விசயத்தில் தோள்கொடுத்து அவர்களது நிலைப்பாடுகளின் வழியே செல்வது ஏன்? நீங்கள் சொல்கிற இந்துக்கள் தமிழர்களின் விரோதிகள் என்று நாங்கள் எடுத்துக்கொள்ளலாமா?

தேர்தல் அறிக்கையில் மருந்துக்குக்கூட ஈழத்தமிழர்கள் பற்றியோ, தமிழ்மீனவர்கள் பற்றியோ குறிப்பிடாதது ஏன்? இந்த இருவகைத் தமிழர்களில் ஒருவர் கூட இந்துக்கள் இல்லையோ? பொன். இராதாகிருட்டிணன் ஏதோ சில நேரங்களில் சொல்கிறார். தமிழர் பற்றிப் பேசுகிறார். ஆனால் வெங்கையாவும், ராசாவும் நீதி மறந்து பேசினால் ஒன்றும் சொல்ல முடியாதவராகிப் போகிறார். பாவம் அவரும் இந்து இல்லை போலும். அவர்கள் பார்வையில் பார்ப்பனர்கள் மட்டும்தான் இந்துக்கள். அதாவது பயன்பெறும் செயல்களில். பயன் இல்லாவிட்டால் எல்லோரும் இந்துக்கள். அந்த எல்லோரையும் வைத்து பயன்களைப் பெற்றுக் கொண்டு, தமிழர்களை துச்சமாக மதிப்பது பா ஜ க வின் வேலையாக இருக்கிறது. தமிழர்கள் இதைப் புரிந்து கொள்ள வேண்டாமா?

காசுமீரத்தின் முன்னோர்களாகிய பண்டிதர்களை கண்ணியத்துடனும் பாதுகாப்புடனும் அவர்களது இடத்தில் வாழ வழி வகை செய்யப்படும். என்ற ஒன்று அந்த பா ச க தேர்தல் அறிக்கையில் உள்ளது. இவர்கள் எல்லாம் யார் தெரியுமா? கைபர் போலன் கணவாய் வழியாக இந்தியத்திற்குள் வந்த வந்தேறிக்கூட்டம். அன்று குதிரையை வெட்டி தீயில் போட்டு அசுவமேதயாகம் என்று பெயரிட்டு குதிரைக்கறி தின்று மதுவைக் குடித்து கும்மாளமிட்ட கூட்டம்தான். அவர்களுக்கு பாதுகாப்பு. தன் வயிற்றுப் பிழைப்புக்காக கடலில் இறங்கி மீன் பிடிக்கும் தமிழ் மீனவனை இலங்கைக் காடையன் சுட்டுக் கொல்கிறான். அதற்கான எந்த கருத்தும் தேர்தல் அறிக்கையில் இல்லை. ஏன்? இவர்கள் எல்லாம் தமிழர்கள். அவர்கள் நினைவில் சூத்திரர்கள் அதனாலா? தங்களுக்குப் பயன் என்று சொன்னால் எல்லோரும் இந்துக்கள் என்பது. இல்லையென்றால் தமிழர்கள் என்பது எந்த வகை சித்து வேலையோ தெரியவில்லை.

> **ராமர் கோவில் இருந்த இடத்தில் பாபர் மசூதி வந்தது. ஆகவே அதை அழித்துவிட்டு, ராமர் கோவில் கட்டுவோம் என்று வீராவேசம் பேசுகிற சூரர்கள், இலங்கையில் இந்துக்கோவில்களை எல்லாம் இடித்து விட்டு புத்த விகார்களைக் கட்டிக் கொண்டிருக்கும் சிங்களர்களுக்கு துணை போவது ஏன்? தங்களது எதிரி களான காங்கிரசுக்காரர் களோடு இந்த விசயத்தில் தோள்கொடுத்து அவர்களது நிலைப்பாடுகளின் வழியே செல்வது ஏன்? நீங்கள் சொல்கிற இந்துக்கள் தமிழர்களின் விரோதிகள் என்று நாங்கள் எடுத்துக்கொள்ளலாமா?**

மத்திய இராணுவ ஆராய்ச்சி மையம் பலப்படுத்தப்படும். இதில் தனியார் துறையினரை ஊக்கப்படுத்தும் வகையில் குறிப்பிட்ட தொழில் களில் நேரடி அன்னிய முதலீடு அனுமதிக்கப்படும் என்ற ஒரு அறிவிப்பும் இருக்கிறது. இராணுவத்தில் தனியார் என்பதும் அந்நிய முதலீடு என்பதும் நாட்டை நாமே அடகு வைத்ததுக்கு ஒப்பாக முடியும். நாங்கள் இந்நாட்டின் புதல்வர்கள். எங்களுக்குத்தான் இந்த நாட்டின்மேல் பற்றும் பாசமும், கடமையும் உண்டு என்று பேசுவது போல் பேசுவதும் நடப்பது போல் நடப்பதும் இவர்களுக்கு கைவந்த கலை. இந்திய சுதந்திரப் போராட்டத்தில் ஆங்கிலேயனிடம் மன்னிப்புக் கேட்ட ஆட்களும், தியாகிகளை ஆங்கிலேயனிடம் காட்டிக் கொடுத்தவர்களும்தான் இவர்களின் முன்னோடிகள். இம்மாதிரியான கட்சி ஆட்சிக்கு வந்தால் நாட்டின் நிலை என்ன ஆகும் என்பதை உணர்ந்து மக்களாட்சி கடமைகளை நிறைவேற்றுவது தமிழர்கள் ஒவ்வொருவரின் தலையாய கடமையாகும்.

◆

வேல் பொன்முடி

# நெல்மணியின் தாய் தமிழ்க்கொடி

தமிழ்க்கொடியின் குடும்பம் வசதியான குடும்பம் அல்ல. தினமும் ஏற்படுகின்ற தேவை களைப் பூர்த்தி செய்து கொண்டு, சேமிப்பு என்ப தைக் கனவில் மட்டும் கண்டு வந்த குடும்பம்.

தமிழ்க்கொடியின் தந்தை ஒரு சிறிய மாத இதழ் வெளியிடுகிற நிறுவனத்தில் தட்டச்சு செய்பவரா கவும் பிழை திருத்துபவராகவும் பணி செய்தார். அம்மா வேலைக்கு எங்கும் செல்ல வில்லை. குழந்தை கள் மூன்றைப் பெற்றெடுத்து அவர்களை வளர்ப்ப திலேயே கவனம் செலுத்தினாள். மனைவியும் ஒரு வேலைக்குச் சென்றிருந்தால் நாமும் ஏதாவது சேமித்திருக் கலாமோ என்று அவர் சில நேரங்களில் எண்ணியதுண்டு. ஆனால் மனைவி வேலைக்குப் போயிருந்தால் இந்த மூன்று முத்துக்களையும் இந்த அளவுக்கு நற்பண்புகளுடன் வளர்த்திருக்க முடியாது. இது கருதி அவர் மனைவியிடம் நீயும் வேலைக்குப் போயிருந்தால் என்றோ, போ என்றோ கூறியதே இல்லை.

சேமிப்பு இல்லாவிடினும் குடும்பம் மகிழ் வாகவே போய்க்கொண்டிருந்தது. மூன்று பெண் குழந்தைகளையும் வளர்த்து ஒவ்வொருவரையும் பட்டப்படிப்பை படிக்க வைத்தார் தமிழ் கொடியின் தந்தை. தமிழ்க்கொடிதான் இளையமகள்.



பெரிய இடமாக இல்லா விட்டா லும்கூட தங்களைப் போன்ற குடும்பங்களில் மூன்று பெண் களையும் திருமணம் செய்து கொடுத்தார். மூன்று பெண்களும் தாய் வீட்டில் இருந்தவரை வேலைக்குப் போய்வந்தனர். திருமணமான பிறகு தமிழ்க்கொடி தன் கணவரிடம் நானும் பட்டப் படிப்பு படித்திருக் கிறேன், ஏதாவது ஒரு வேலை வாங்கித் தாருங்கள், நானும் வேலை செய்கிறேன். குடும்பத்திற்கு உதவியாக இருக்கும் என் றாள். அவளது கணவன் கதிர் அழகனோ, வேண் டாம்மா, நான் பாத்துக் கிறேன். நீ எங்க அப்பா அம்மாவ கவனிச் சுக்கோ என்று கூறிவிட்டான்.

கதிர் இப்படிச் சொன்னதில் அவளுக்குச் சிறிது வருத்தம் தான் என்றாலும், மாமனார் மாமியாரைக்

கவனித்துக் கொள்வதில் மகிழ்ந்தான். ஏனென்றால் அவர்களது மூத்த மகன் திருமணம் ஆன சில மாதங்களிலேயே தனியாகப் போய்விட்டார். கதிர் அப்போது படித்துக் கொண்டிருந்தான். தம்பியின் படிப்பு முடியும் வரையாவது இருடா என்று தந்தையார் வேண்டினார். ஆனால் அவனோ நீங்கள் பெற்றோர்கள் என்பதால் உங்களுக்குச் சாப்பாடு போடுகிறேன். அவனுக்கெல்லாம் என்னால் எதுவும் செய்ய முடியாது. அவன் படித்தது போதும் அவனை வேலைக்குப் போகச் சொல்லுங்கள், அவனை அவனே பார்த்துக் கொள்ளட்டும். என்று சொல்லிச் சென்று விட்டான். பெற்றோர்கள் அதிர்ந்து விட்டனர். மருமகள் எதுவும் தெரியாதது போல் நடந்து கொண்டாள்.இப்படிப்பட்டவனுடன் போனால் என்னாகுமோ என்று அஞ்சி சின்ன மகனுடன் இருந்து விட்டனர்.

கதிர்அழகனோ படித்துக் கொண்டே வேலையும் பார்த்தான். தந்தையார் இரவுக் காவலர் வேலைக்குச் சென்று வந்தார். பட்டப் படிப்பை முடித்ததும் அப்பாவை வேலைக்குப் போக வேண்டாம் என்று நிறுத்திவிட்டு கதிர் வேலைக்குச் சென்றான். மூத்தவனை நினைத்து கவலை கொண்டாலும் இளைய மகனை எண்ணி மகிழ்ச்சி அடைந்தனர் பெற்றோர். இளையவனுக்கு பெற்றோர் பெண் பார்த்து திருமணம் செய்து வைத்தனர். மருமகளாக வந்த தமிழ்க்கொடியோ மகளாகவே ஆகிவிட்டாள். அப்பா அம்மா என்றுதான் அழைப்பாள். அந்தப் பெற்றோர் எல்லாக் கவலைகளும் மறந்து தமிழ்க் கொடியின் பிள்ளை களாகிப் போயினர்.

தமிழ்க்கொடிக்கு ஒரு ஆண் குழந்தை பிறந்தான். தமிழ்க்கொடிக்கு மிகுந்த மகிழ்ச்சி. ஏனென்றால் அவள் பிறந்த வீட்டில் மூவரும் பெண்கள் என்பதுதான். ஆனால் கதிர் அழகனுக்கும் அவனது பெற்றோருக்கும் பெண் குழந்தை பிறந்திருந்தால் நன்றாக இருந்திருக்கும் என்றனர். அவளோ அவர்களை மகிழ்விப்ப தற்காகவே இன்னும் இரண்டு ஆண்டுகள் பொறுத்துக் கொள்ளுங்கள், பேத்தியை பெற்றுத் தருகிறேன் என்றாள்.

கதிரின் பெற்றோர்களுக்கு அளவில்லாத மகிழ்ச்சி. எங்க பேத்தியப் பார்த்தப்புறம்தான் எங்களுக்கு வாழ்க்கையில் நிறைவு ஏற்படும் என்றனர். இப்படிப் போய்க்கொண்டிருந்த அக் குடும்பத்தின் வாழ்க்கையில் ஒரு புயல் வீசியது. கதிர்அழகன் உடல்நலமில்லாமல் ஆகிவிட்டான். மருத்துவமனை சென்று சோதனை செய்தபோது அவனுக்கு இரண்டு சிறுநீரகங்களும் செயலிழந்து விட்டன. சிறுநீரகத்தை வாங்குவதற்கான பொருளா தாரச் சூழல் இல்லை. தமிழ்க்கொடி படித்தவள் என்பதால் யாரிடமும் கருத்துக் கேட்காமல் மருத்தவரிடம் சென்று எனது சிறுநீரங்ககளில் ஒன்றை எனது கணவருக்குக் கொடுக்க விரும்பு கிறேன் என்றாள். கணவன் எவ்வளவோ சொல்லிப் பார்த்தான் வேண்டாம் என்று. ஆனால் தமிழ்க் கொடி கேட்கவில்லை. சேருமா என்று சோதிக்கப் பட்டது. சேரும் என்று முடிவும் வந்தது. சிகிச்சை நடந்தது வெற்றிகரமாக. இதற்கிடையில் கதிரின் தந்தை இரவு காவலர் வேலைக்குச் சென்றார்.

கதிர் கொஞ்சநாள் வீட்டில் ஓய்வில் இருந்தான். பின்னர் வேலைக்குச் சென்றான். இருவரும் இயல்பு வாழ்க்கைக்கு வந்து விட்டார் கள், என்றாலும் கதிர்அழகன் மட்டும் தன் மனைவி தனக்கு முன்னால் இறந்து விடக் கூடாது என்று தினமும் கடவுளை வேண்டிக் கொண்டு வந்தான்.

தமிழ்க்கொடியோ மிகவும் மகிழ்ச்சியுடன் அந்தக் குடும்பத்தை நடத்தினாள். தமிழ்க் கொடியின் மகளுக்கு நெல்மணி என்று பெயர் வைத்தார்கள். விழாவிற்கு வந்த தமிழ்க்கொடியின் தந்தை மகளைப் பார்த்து, மிகவும் செல்லமாக வளர்ந்தவள் இவ்வளவு பொறுப்பாக மாறி விட்டாளே என்று மனைவியிடம் சொல்லிச் சொல்லி மகிழ்ந்தார். நெல்மணியை தூக்கி வைத்திருந்த கதிர்அழகனின் அப்பா, "என் பேத்தி, என் நாச்சியா" என்று பேத்தியைக் கொஞ்சிக் கொண்டிருந்தார்.

◆

இயற்றமிழன்


# இலக்கணங்களின் வழி நிற்கும் ஒப்பற்றத் தமிழ் மொழி 17

**ஒலியசை முறை**

எழுத்துக்கள் சில சேர்ந்து சொற்களாக அமைகின்றன. அவ்வாறு சொற்கள் அமையும் முறையில் எளிமையும் உண்டு. அருமையும் உண்டு. திராவிட மொழிகளில் எளிமையே காணப்படு கின்றது. ஒலித்தற்கரிய கூட்டொலிகளையும் ஒலியமைப்பிற்குக் கூடா ஒலிகளையும் திராவிட மொழிகள் ஒதுக்கி வந்திருக்கின்றன. உயிரும் மெய்யும் சேர்ந்து ஒலித்தற்கு எளியனவாக உள்ள அசைகளே சொற்களாக அமைந்துள்ளன. த்வ முதலான கூட்டொலிகள் தத்வம் முதலிய சொற் களில் உள்ளன. அத்தகைய வடசொற்கள் தெலுங்கு, கன்னட, மலையாள மொழிகளில் காணப்பட் டாலும், அவற்றை அந்த மொழிகளின் இயற்கை யான ஒலிகளாகக் கருதலாகாது. பிற மொழியின் சொற்களை அவ்வாறே ஏற்றுக்கொள்ளுவதால், அக்கூட்டொலிகள் அம்மொழிகளில் காணப்படு கின்றன. பிறமொழிச் சொற்களை அவ்வாறே ஏற்றுக் கொள்ளாமல், திராவிட ஒலிமுறைக்கேற்ப அமைத் துக் கொள்ளும் மொழி தமிழே. தமிழ்மொழியில் பழைய திராவிட மொழியின் ஒலியமைப்பு இன்னும் மாறாமல் இருந்துவரக் காரணம் அதுவே.

சொல்லின் முதலில் உயிரேனும் மெய்யேனும் வருதல் உண்டு. தமிழ்மொழியில் உள்ள பன்னிரண்டு உயிரும் மொழி முதலாக வரும். பன்னீ ருயிரும் மொழிமுத லாகும். தொல்எழுத்.59. மெய்யெழுத்துக்களில் க ச த ந ப ம வ ய ஞ என்பவை முதலில் வருவன. மொழி முதல் எழுத்துக்களில் ஙகரம் ஒன்றைத் தொல்காப்பியனார் விதிக்கவில்லை. ஆயின், பவணந்தியார்,

> சுட்டியா எகர வினாவழி அவ்வை
>
> ஒட்டி ஙவ்வும் முதலா கும்மே
>
> *நன்னூல் எழுத். 106*



என விதித்துள்ளா. ஙனம் என்பது ஒரு சொல் எனத் தவறாகக் கொண்டமையால், அங்ஙனம் இங்ஙனம் முதலிய சொற்களைக் கருதி இவ்வாறு விதிக்கலானார். ஆங்கனம் ஈங்கனம் முதலிய சொற்களின் திரிபே அவை என்னும் உண்மை உணர்ந்திருப்பின் இவ்விதி பிறந்திருக்காது.

ஏனைய மொழி முதலில் வரக் காரணம், அவை முதலில் ஒலித்தற்கு அரிய ஒலிகளாக இருத்த லேயாகும்.

'இந்த மெய்யெழுத்துக்களும் மொழி முதலாக வரும்போது உயிருடன், கூடியே வருமெனத் தொல்காப்பியனார் கூறியுள்ளார்! உயிர்மெய் அல்லன மொழிமுதல் ஆகா தொல். எழுத். 6. மற்றொரு மெய்யுடன் கூடி முதலில் வருதல் இல்லை. ஆங்கிலம் முதலான மொழிகளில் இரண்டு மெய்யும் மூன்று மெய்யும் மொழி முதலில் வரக் காண் கின்றோம்.

**State** இருமெய் முதலில் வரல்

**Strong** மூன்று மெய் முதலில் வரல்

தமிழில் இவ்வாறு இருமெய் (consonant clusters) வாராமை கண்ட தொல்காப்பியனார், வருமென்று விதித்துள்ளார். மெய்யெழுத்துக்களை இரண்டனைச் சேர்த்து ஒலிக்குங்கால் மூச்சுத்தடை மிகுவதால், முயற்சி அரிதாகின்றது. மொழி ஒரு கருவியே ஆதலின், அதனை எளிதாக்கிச் சிறந்த வகையில் பயன்படுத்த விரும்பும் மக்கள் இத்தகைய சீர்திருத்தம் செய்துகொள்ளுதல் இயற்கை. அதனால், ஒலித்தற்கரிய கூட்டொலிகளை ஆங்கில மொழியினரும் ஒலிக்காமல் விட்டு வருகின்றனர். Knife,know,gnaw முதலான சொற்களில் உள்ள முதல்மெய் ஒலிக்கப்படாமைக்கு இதுவே காரணமாகும்.

பழைய ஆங்கிலத்தில் பல சொற்களின் முதலில் இரண்டு மெய்யாக இருந்தவற்றுள் ஒன்று கெட்டு. இன்றைய ஆங்கிலத்தில் ஒரு மெய்யே நிற்றல் காணலாம்:

| பழைய ஆங்கிலம் | இன்றைய ஆங்கிலம் |
| --- | --- |
| Hring | ring |
| Hleapan | leap |
| Hnecca | neck |

சொல்லின் முடிவிலும் இரண்டு மூன்று மெய்யெழுத்துக்கள் நிற்றல் இல்லை. செய்யுள் இறுதிப் போலி மொழிவயின் னகார மகாரம் ஈரொற்றாகும்.

னகாரை முன்னா மகாரம் குறுகும்.

போன்ம்' இறுதியில் னகரமும் மகரமும் ஈரொற்றாய் நிற்கும் என்றும், அவ்விடத்தும் மகரம் முற்றிலும் ஒலிக்காமல் குறுகி ஒலிக்கும் என்றும் தொல்காப்பியனார் கூறியுள்ளார்.

வடமொழியிலும் இரண்டு மெய்யெழுத் துக்கள் இறுதியில் நிற்றல் இல்லை. கிரேக்க மொழியில் நசர என்னும் மெய்யெழுத்துக்கள் மட்டுமே ஈற்றெழுத்தாவன. சீனமொழியில் மூக்கின மெய் மட்டும் ஈற்றில் நிற்கும். இத்தாலிய மொழியிலும் பாலினேஷிய மொழியிலும் உயிரெழுத்தே இறுதியில் வரும். ஆங்கில மொழி யில் மட்டுமே ஓர் உயிர் எழுத்தைச் சூழ்ந்து ஆறு ஏழு மெய்யெழுத் துக்கள் நின்று சொல் அமையும் முறை உளது. Splints, strands twelfths போல whitney, language and the study of the language,p.95

தனி மெய்யாக நிற்குமிடத்தும், எல்லா மெய்களும் ஈற்றில் நிற்கத்தக்கன அல்ல. இடையின மாகிய எல்லா மெய்களும் மொழியிறுதியில் நிற்பன. மூக்கினத்துள் நகரம் நிற்றல் இல்லை. அதனை ஈற்றில் ஒலித்தல், அருமையாகும். ஏனைய ங, ண, ந, ம, ன என்னும் ஐந்து மூக்கின மெய்களும் ஈற்றில் நிற்பன. வல்லினமாகிய கசடதபற என்னும் ஆறு மெய்யும் ஈற்றில் நின்று ஒலித்தல் பெருமுயற்சி யாகும். வெடியினம் என்று ஒலிநூலார் பெயரிட்ட தற்கேற்ப, ஓர் உறுப்பு மற்றோர் உறுப்போடு உறப்பொருந்தித் திடீரெனப் பிரிந்தால் அவை பிறக்கும். இத்தகைய முயற்சி சொல்லின் முடிவில் இருத்தல் தக்கது அன்று. ஆதலின், இந்த மெய்கள் ஆறும் குற்றியலுகரத்தின் துணை கொண்டு சொல்லின் இறுதியில் நிற்றல் உண்டு என்று தொல்காப்பியனார் ஓதியுள்ளார்.

**ஞணநமன யரல வழள என்னும் அப்பதி னொன்றே புள்ளி யிறுதி தொல்.**

*எழுத்ததிகாரம் 78.*

அழுத்தமாகப் பொருந்திய உறுப்புக்கள் பிரிந்து மூச்சு வெளிப்பட்டு முயற்சி எளிமை யாவதற்குக் குற்றியலுகரம் துணையாகின்றது.

◆

# இலங்கையில் தமிழர்

முருகர் குணசிங்கம்

## அத்தியாயம் ஒன்று தமிழரின் தோற்றமும், ஆரம்ப வரலாறும் (கி.மு.300 கி.பி.300)

எழுத்து ஆதாரங்களுடன் வரலாறு ஆரம்பிக்கின்றது என்பது வரலாற்று அறிஞர்களால் பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒரு கோட்பாடு. மனிதவர்க்கத்தின் பரிணாம வளர்ச்சியின் ஓர் உயர்நிலையிற்தான் எழுத்து வடிவம் தோற்றம் பெறுகின்றது. இதுவே வரலாற்றுக் காலமாகப் பரிணமிக்கின்றது. எழுத்து வடிவம் தோன்றுவதற்கு முன்னதான மனித வரலாறு, வரலாற்றுக்கு முந்திய காலம் எனக் கருதப்படுகின்றது.

மக்கள் இல்லாத பிரதேசம் வரலாறு இல்லாத பிரதேசமாகின்றது. எனவே, மனிதனின் ஆரம்பத் தோற்றத்துடன் தான் ஒரு தேசத்தினுடைய வரலாறு, வரலாற்றுக்கு முந்திய காலமாக வரலாற்றில் இடம் பெறுகின்றது. எனவே மனிதனின் ஆரம்பத் தோற்றம் ஒரு பிரதேசத்தில் அல்லது நாட்டில் எப்பொழுது? எங்கே? எவ்வாறு? தோற்றம் பெற்றது என்ற கேள்விகளுக்கு விடை காண்பது, வரலாறு, தொல்லியல், புவியியல், மானிடவியல், மொழியியல், சமூகவியல் துறைகள் சார்ந்த அறிஞர்களுக்கு ஒரு பிரச்சனைக்குரிய விடயமாக இருந்து வருகின்றது.

வரலாற்று ஆசிரியர் ஒரு தேசத்தின் வரலாற்றை ஆய்வு செய்யும் பொழுது வரலாற்றுக்கு முந்திய காலம், வரலாற்றுக் காலம் என இரு



17

பெரும் பிரிவுகளுக்குள் பொதுவாக பகுப்பது வழக்கம். வரலாற்றுக்கு முந்திய காலமானது எதுவித எழுத்து ஆதாரங்களும் அற்ற ஒரு தேசத்தினதும், மக்களினதும் வரலாறாக இருக்கும்.

மேலும், வரலாற்று ஆசிரியர் வரலாற்றுக்கு முந்திய காலத்தையும், வரலாற்றுக் காலத்தையும் பல காலப்பிரிவுகளாக வகுத்து ஆய்வுகளை மேற்கொள்வர். சிறப்பாக, வரலாற்றுக்கு முந்திய காலத்தை, பழைய கற்காலம், இடைக் கற்காலம், இரும்புக் காலம் என்ற பகுப்பினுள்ளும், வரலாற்றுக் காலத்தைப் புராதன வரலாற்றுக் காலம், மத்திய வரலாற்றுக் காலம் எனவும் பொதுவாகப் பகுத்து ஆய்வுகளை மேற்கொண்டு வரலாற்றை எழுதுவர்.

ஆதிமனிதன் தன் பரிணாம வளர்ச்சிப் பாதையில் நாடோடியாக, நாகரிகம் அற்றவனாகக், கற்களைப் பயன்படுத்தி வேட்டையாடி வாழ்ந்த நீண்ட காலப்பகுதியைக் கொண்டதாக, அதாவது பல்லாயிரக் கணக்கான வருடங்களை உள்ளடக்கிய தாக, இக்கற்காலங்கள் காணப்படு கின்றன. ஆதிமனிதனின் பரிணாம வளர்ச்சியின் ஒரு காலக்கட்டத்தில், கற்களுக்குப் பதிலாக இரும்பைப் பயன்படுத்தி, நாடோடி வாழ்க்கையி லிருந்து முன்னேறி, இயற்கை வளங்கள் உள்ள இடங்களில் தங்களது வாழ்க்கையை நிலையாய் அமைத்து வாழத் தொடங்கிய காலமாக இரும்புக் காலம் காணப்படுகின்றது. இதனை இரும்புக்காலப் பண்பாடு என்று வரலாற்று ஆசிரியர் பொதுவாக அழைப்பர். மேலும், மனிதன் நிலையான வாழ்க்கை வாழத்தொடங்கி நாகரிகம் அடைகின்ற ஒரு நிலையில், அவனால் பேசப்பட்டுவந்த மொழி எழுத்து வடிவம் பெறும் வேளையில், எழுத்தா தாரங்கள் கொண்ட வரலாற்றுக் காலம் தோற்றம் பெறுகின்றது.

இவ் ஆய்விற் குறிப்பாக, வரலாற்றுக்கு முந்தியகாலம், வரலாற்றுக் காலம் எனும் இரு பெரும் பிரிவுகளுக்குள் நின்றே இலங்கைத் தமிழரின் ஆரம்பத் தோற்றம் பற்றி, அவர்களுடைய அடையாளம் பற்றி ஆய்வு செய்யப்படும். தேவை கருதிக் கற்காலம், இரும்புக் காலம் என்ற காலப்பிரிவுகளுக்குள் நின்றும் ஆய்வுகள் மேற்கொள்ளப்படும். இவ்வாறான அணுகுமுறை, இலங்கைத் தமிழர் பற்றிய ஒரு பூரணமான வரலாற்றினை விளங்கிக் கொள்வதற்கு மிக அத்தியாவசியமாகின்றது.

இலங்கையில் ஆதிமனிதர் பற்றி, குறிப்பாக இலங்கைத் தமிழர்பற்றி அறிவியல் கண்ணோட் டத்துடனும், விஞ்ஞான ரீதியாகவும் ஆய்வுகளை மேற்கொண்ட வரலாற்று அறிஞர் பேராசிரியர் இந்திரபாலா அவர்கள் வெளியிட்ட 'இலங்கைத் தமிழர்: ஓர் இனக்குழு ஆக்கம் பெற்ற வரலாறு' என்ற நூலிற் கீழ்க் கண்டவாறு கூறப்பட்டுள்ளது. இலங்கையில் தமிழர்களின் ஆரம்பத் தோற்றம் பற்றி விளங்கிக் கொள்வதற்கு மிக இன்றிய மையாததாகின்றது.

இதுவரை கிடைத்துள்ள சான்றுகளைக் கொண்டு, ஆப்பிரிக்கக் கண்டத்திலேதான் ஆதிமனிதர் தோன்றி பிற இடங்களுக்குச் சென்று குடியேறினர் என அறிவியலாளர் கருதுவர். மனிதவர்க்கத்தைச் சேர்ந்தோர் என்று கருதக் கூடிய பண்புகளைக் கொண்ட ஆதிமனிதருடைய எச்சங்கள் ஆப்பிரிக்காவில் பல இடங்களில் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன. இவற்றுள் மிகப் பழமையாகக் கருதப்படுவது 2001 இல் சட் நாட்டில் கிடைத்த சான்றாகும். இது ஏறத்தாழ ஏழு மில்லியன் (எழுபது இலட்சம்) ஆண்டுகளுக்கு முற்பட்டது. அந்நிலையில் இன்றைய மனித வடிவம் காணப்படவில்லை. அப்படியான வடிவம் உருவாகப் பல இலட்சம் ஆண்டுகள் சென்றன. நீண்டகாலப் பரிணாம வளர்ச்சியின் பின் இன்றைய மனிதவடிவம் தோன்றியது. இதன்பின் இற்றைக்கு 60,000 ஆண்டுகளுக்கு முன், ஆப்பிரிக்காவில் இருந்து மனித வர்க்கத்தினர் வேறிடங்களுக்குச் செல்லத் தொடங்கினர். இவர்களே இன்று உலகின் பல்வேறு நாடுகளில் வாழும் மக்களுடைய முன்னோர்கள்.

மேலும், அவர் தொடர்ந்து கூறுவதாவது-

"இவ்வாறு நவீன அறிவியலாளர்கள் எடுத்துரைக்கும் மனிதப் பரிணாம வளர்ச்சிக் கோட்பாட்டை ஏற்றுக் கொண்டால், இன்றைய உலகின் இனவேறுபாடுகள் இற்றைக்கு 60,000 ஆண்டுகளுக்கு முன் காணப்படவில்லை. அப்பொழுது கறுப்பர் என்றும், வெள்ளையர்

என்றும் வேறுபடுத்தக்கூடிய வர்க்கங்கள் இருக்க வில்லை. தோல் நிறத்தாலும், தலைமுடியின் தன்மை யாலும், கண் அமைப்பாலும் வேறுபடுகின்ற சீனர், ஐரோப்பியர், மற்றும் ஆப்பிரிக்கர் என்று பிரித்துக் காட்டக்கூடிய இனங்கள் இருக்கவில்லை. இந்த உண்மையை ஏற்றுக்கொண்டால், பல்லாயிரம் ஆண்டுகளாக உலகில் மனித வர்க்கத்தினுள் ஏற்பட்டு வந்த மாற்றங்களும், கலப்பும், வெளியுலகக் காரணிகளும் செயற்பட்டு இன்றைய இனக் குழுக்கள் உருவாவதற்கு உதவின என்பதை விளங்கிக் கொள்ள முடியும்."

ஆதிமனிதர் தோற்றம் பற்றி வேறு சில கருத்துக்கள் இருந்தபோதிலும், அறிவியல் கண்ணோட்டத்தில் ஆய்வுகளை நடத்திய அறிஞர் பலர், ஆப்பிரிக்காவில் இருந்து தோற்றம் பெற்று இடம் பெயரத் தொடங்கிய ஆதிமனிதர் செங் கடலின் தென்பாகத்தைக் கடந்து அரேபியாவின் தென்கரை வழியாக இந்தியாவின் தென்கரையை அடைந்து அங்கிருந்து இந்தோனேஷியா வழியாக ஆஸ்திரேலியா வரை சென்றனர் என்றும் இப் பெயர்ச்சி 60,000 ஆண்டுகளுக்கு முன்னர்தான் தொடங்கியது என்றும் பொதுவாக ஏற்றுக் கொண்டுள்ளனர்.

மேற்கூறியவாறு ஏற்பட்ட இனப்பரம்பல் தென் இந்தியா, இலங்கைப் பிரதேசங்களைப் பொறுத்தவரையில், ஒரு முக்கிய நிகழ்வாகக் காணப்படுகின்றது. ஆபிரிக்காவில் இருந்து ஏற்பட்ட இவ் இனப்பரம்பல் இந்தியாவைப் பொறுத்தமட்டில் தென் இந்தியவிற்தான் முதலில் ஏற்படுவதைப் பூகோளரீதியாகப் பார்க்க முடிகின்றது. இதன்படி வட இந்தியப் பிரதேசங் களில் மனிதர் நடமாட்டம் ஏற்படுவதற்கு முன்னதாகவே தென் இந்தியா, இலங்கைப் பிராந்தியத்தில் மனிதர் வாழத் தொடங்கியிருக்கின் றார்கள் எனத் தெரிகிறது. இக்காலப்பகுதியில், குறிப்பாக இலங்கைத் தீவு, இந்தியத் துணைக் கண்டத்துடன் புவியியல் ரீதியாக ஒருங்கிணைக் கப்பட்ட பிரதேசமாக இருந்திருக்கின்றது. இலங்கைத் தீவு இந்திய நிலப்பகுதியில், இருந்து இன்றைக்கு 7000 ஆண்டுகளுக்கு முன்புதான் இறுதியாகப் பிரிந்து வேறு நிலப்பகுதி ஆகியிருக் கின்றது.

**வருங்கால பாரதப் பிரதமர் அம்மா அவர்களின் கரத்தை வலுப்படுத்துவோம்!**



# தேர்வு முடிவு

**த. ஞானமணி**

1960 களில் வதனன் உயர்நிலைப்பள்ளியில் படித்துக் கொண்டிருந்தான். 66 ஆம் ஆண்டு பத்தாம் வகுப்பு முழு ஆண்டுத் தேர்வு முடிந்தது. 21 நாட்கள் முடிந்து விட்டன. வதனனின் நண்பர்கள் அவனிடம் "இருபத்தைந்தாம் தேதி தேர்வு முடிவுகளைப் போடுகிறார்கள்" என்று சொன்னார்கள். வதனன் எப்போதும் தேர்வு முடிவுகளுக்காகக் கவலைப்பட்டவனல்ல. ஏனென்றால் அவனுக்கு நினைவு தெரிந்த நாள் முதல் அவன் புத்திசாலி. பள்ளியில் அவன்தான் முதல் மாணவன். காரணம் அவனது தந்தையும் தாயும் என்றே சொல்லலாம். வீட்டில் ஏழ்மைதான் என்றாலும் அவர்கள் இல்லத்தில் அறிவுச் செல்வம் கொட்டிக் கிடந்தது. வதனனின் தந்தை ஒரு பகுத்தறிவுவாதி என்பதால் சிந்தனைக்கு அவனிடம் பஞ்சம் ஏற்பட்டதே இல்லை. சில வேளைகளில் ஆசிரியர் கணக்குப்பாடத்தில் திணறிக் கொண்டிருக்கும்போது வதனன் அந்தக் கணக்குக்கு தீர்வு சொல்லிவிடுவான். அந்த ஆசிரியரும் அவனை அதற்காகப் பாராட்டி கரும்பலகையில் அதை விளக்கி எழுதுமாறு கூறுவார். பல வேளைகளில் ஆசிரியருக்குப் பதிலாக அவனே ஆசிரியப் பணியைச் செய்திருக்கிறான். பள்ளியில் வதனனுக்கு என்று ஓர் நல்ல மதிப்பு இருந்தது.

மாணவர்கள் வதனனோடு பேசுவதை, தங்களுக்குக் கிடைக்கிற பெருமையாகவும் மகிழ்ச்சியாகவும் கருதினார்கள். ஆனால் எந்த ஒரு மாணவனும் வதனனைப் பொறாமை கொண்டு பார்த்ததில்லை. சூரியனை ஒரு மாணவன் போட்டியாக நினைக்க முடியுமா? அப்படித்தான் வதனனை மற்ற மாணவர்கள் மதித்து மகிழ்ந் தார்கள். போட்டியே இல்லாத மாணவனாக வதனன் திகழ்ந்தான்.

மாணவர்கள் போட்டியாக கருதவில்லை என்றாலும் ஆசிரியர்களில் ஒரு சிலர் அவனை ஏதாவது செய்ய வேண்டும் என்று கருதினார்கள். அப்படிக் கருதிய ஆசிரியர்கள் எப்படிப்பட்டவர்கள் என்றால் ஒழுங்கீனங்களில் ஈடுபட்டிருப்பவர்கள். தங்களது ஆசிரியப் பணியை சரிவர ஆற்றாமல் மாணவர்களை தங்களது வீட்டு வேலைக்கும், வயல் வேலைகளுக்கும் அனுப்பு



பவர்கள் தான் வதனனை வெறுத்தார்கள். அதற்குக் காரணமும் இருக்கத்தான் செய்தது. தவறுகிற ஆசிரியர்களிடம் நீங்கள் செய்வது தவறு என்று சுட்டிக்காட்டினான். அவர்கள் அதைக் கேட்கா விட்டால் தலைமை ஆசிரியரிடம் சொல்லுவான். இப்படிப்பட்ட தவறான செயல்களில் ஈடுபடும் சில ஆசிரியர்களுக்குதான் அவனைப் பிடிக்காமல் போய்விட்டது.

இந்த நிலையில் தான், அந்தத் தேர்வு முடிவுகள் அறிவிக்கப்படும் இருபத்தைந்தாம் தேதி வந்தது. பள்ளியில் ஒரு அறையின் சன்னல் கதவுகள் திறந்திருக்கும் உள்ளுக்குள் ஒரு கரும்பலகையில் தேர்ச்சி பெற்றவர்களின் பெயர்கள் வகுப்பு வாரியாக எழுதி ஒட்டப்பட்டிருக்கும். கைகளைக் கொண்டு அப்பலகையைத் தொட முடியாத அளவிற்கு தூரத்தில் வைக்கப்பட்டிருக்கும். யாராவது தோல்வியுற்ற மாணவர்கள் அதைக் கிழித்துப் போட்டுவிடக் கூடாது என்பதற்கான ஒரு ஏற்பாடு தான் அது. ஒருமுறை அப்படி நிகழ்ந்தது. மறுபடியும் முடிவுகள் எழுதி ஒட்டப்பட்டன. எனவேதான் கைக்கெட்டாத தூரத்தில் கண்ணுக்குப் புலப்படும் தூரத்தில் அந்தப் பலகை நிறுத்தப்பட்டிருக்கும்.

வதனின் நண்பர்கள் வேகமாக ஓடிவந்தனர் அவனை நோக்கி. அப்போதுதான் தனது அம்மாவிடம் "அம்மா நான் பள்ளிக்கூடத்திற்குப் போய் தேர்வு முடிவுகளைப் பார்த்து விட்டு வந்துவிடுகிறேன்" என்று சொல்லிவிட்டு வெளியே வந்து கொண்டிருந்தான். நண்பர்கள் வருவதைக் கண்டான். அவர்கள் இவனை நோக்கி வரவும், இவன் அவர்களை நோக்கிச் சென்று கொண்டிருந்தான். அவர்கள் முகம் தெரியும் தூரத்தில் அவர்களைப் பார்த்த வதனனுக்கு ஏதோ ஒரு வருத்தமளிக்கக்கூடிய செயல் நடந்திருக்கிறது என்று நினைக்கத் தோன்றியது. அது வருகிறவர்களில் யாருக்கு நடந்திருக்கும் என்று சிந்தித்தவாறே சென்றான். அதற்குள் அவர்களும் அண்மித்து விட்டனர். "டேய் வதனா உன் பேரு தேர்வு முடிவுல இல்லடா" என்றனர். வதனனை குழப்பம் சூழ்ந்து கொண்டது. ஏன் என்றே புரியவில்லை.

வதனனும் பள்ளிக்குச் சென்று பார்த்தான். அவன் பெயர் இல்லை. என்ன செய்வதென்று திகைத்தான். யாரிடம் போய்க் கேட்பது? அவனுக்கு யார் உதவுவார் என்றே தெரியவில்லை. பலர் இவனிடம்தான் ஆலோசனை கேட்பார்கள். அப்படியிருக்க இவன் யாரிடம் செல்வது என்று யோசித்தான். இவனைப் பிடித்த சில ஆசிரியர்கள் இருந்தனர். அவர்களிடம் சென்றான். அவர்களோ "நீ நிச்சயம் தேர்ச்சி பெற்றிருப்பாய். அதில் ஐயம் தேவையில்லை. இங்குதான் ஏதோ நடந்திருக்கிறது" என்றார்கள். வதனன் ஒரு முடிவோடு வந்தான். தேர்வு இயக்ககம் செல்வதென்று. அடுத்த நாளே பெற்றோரிடம் செய்தியைச் சொல்லிவிட்டு நகரத்திற்குச் சென்றான். தனது தேர்வு எண்ணைக் கொடுத்து விசாரித்தான். அவர்கள் உண்மையைச் சொன்னார்கள். மாவட்டத்திலேயே முதல் மாணவனாக தேர்ச்சி பெற்றிருக்கிறாய் என்றார்கள். அதற்கான படி ஒன்றைப் பெற்றுக்கொண்டு சொந்த ஊருக்கு வந்து சேர்ந்தான். விபரமறிந்த அவன் பெற்றோரும், நல்லாசிரியர்களும், நண்பர்களும் மகிழ்ந்தனர். ◆

## தமிழ் பெயர்ப்பலகைப் பெயர்கள்

1 டிரேடர்ஸ்' வணிக மையம்
2 கார்ப்பரேஷன் ' நிறுவனம்
3 ஏஜென்சி ' முகவாண்மை
4 சென்டர்' மையம், நிலையம்
5 எம்போரியம்' விற்பனையகம்
6 ஸ்டோரஸ்' பண்டகசாலை
7 ஷாப்' கடை, அங்காடி
8 அண்கோ ' குழுமம்
9 ஷோரூம் ' காட்சியகம், எழிலங்காடி
10 ஜெனரல் ஸ்டோரஸ்' பல்பொருள் அங்காடி
11 டிராவல் ஏஜென்சி' சுற்றுலா முகவாண்மையகம்
12 டிராவலஸ்' போக்குவரத்து நிறுவனம் சுற்றுலா நிறுவனம்
13 எலக்டிரிகலஸ் ' மின்பொருள் பண்டகசாலை
14 ரிப்பேரிங் சென்டர் சீர்செய் நிலையம்
15 ஒர்க் ஷாப் ' பட்டறை, பணிமனை
16 ஜுவெல்லரஸ்' நகை மாளிகை, நகையகம்
17 டிம்பரஸ்' மரக்கடை
18 பிரிண்டரஸ்' அச்சகம்
19 பவர் பிரிண்டரஸ்' மின் அச்சகம்
20 ஆப்செட் பிரிண்டரஸ் ' மறுதோன்றி அச்சகம்
21 லித்தோஸ் ' வண்ண அச்சகம்
22 கூல் டிரிங்கஸ் ' குளிர் கலவையகம், குளிர் கலவை நிலையம்
23 ஸ்வீட் ஸ்டால்' இனிப்பகம்
24 காபி பார்' குளம்பிக் கடை
25 ஹோட்டல் ' உணவகம்

# புரட்சிக்கவி

6

பாரதிதாசனார்



புரட்சிக்கவிஞர்

**சிந்து கண்ணிகள்**

கொற்றவன் பெற்ற குலக்கொடி யைக்கவி
கற்கஉன் பால்விடுத்தேன் - அட!
குற்றம் புரிந்தனை யாதில்லை யாதிதை
மட்டும் உரைத்துவிடு!
வெற்றி எட்டுத்திக்கு முற்றிலு மேசென்று
மேவிட ஆள்வன்நான் - அட
இற்றைக்கு நின்தலை அற்றது! மற்றென்னை
என்னென்றுதா னினைத்தாய்?

வாள்பிடித்தேபுவி ஆளுமி ராசர்என்
தாள்பிடித்தே கிடப்பார்! - அட
ஆள்பிடித் தால்பிடி ஒன்றிருப்பாய் என்ன
ஆணவ மோஉனக்கு?
மீள்வதற்கோ இந்தத் தீமை புரிந்தனை
வெல்லத் தகுந்தவனோ? - இல்லை!
மாள்வதற்கே இன்று மாள்வதற்கே' என்று
மன்னன் உரைத்திடவே.

'மாமயில் கண்டு மகிழ்ந்தாடும் முகில்
வார்க்கும் மழைநாடா! - குற்றம்
ஆம்என்று நீயுரைத் தால்குற்ற மே! குற்றம்
அன்றெனில் அவ்விதமே!
கோமகள் என்னைக் குறையிரந் தாள் அவள்
கொள்ளை வனப்பினிலே - எனைக்
காமனும் தள்ளிடக் காலிட றிற்றுக்
கவிழ்ந்தவன் னம் வீழ்ந்தேன்!


பழகும் இருட்டினில் நானிருந் தேன் எதிர்
பால்நில வாயிரம்போல் - அவள்
அழகு வெளிச்சம் அடித்த தென்மேல்
அடியேன் செய்த தொன்று மில்லை.
பிழைபுரிந் தேனென்று தண்டனை போடுமுன்
பெற்று வளர்த்த - உன்றன்
இழைபுரிச் சிற்றிடை அழுதவல் லிக்குள்ள
இன்னல் மறப்பதுண்டோ?

நொண்டி சிந்து

கவிஞன் இவ்வாறுரைத்தான் - புவி
காப்பவன் இடியெனக் கனன்றுரைப்பான்:
குவிந்தஉன் உடற்சதையைப் - பல
கூறிட்டு நரிதின்னக் கொடுத்திடுவேன்.
தவந்தனில் ஈன்றஎன்பெண் - மனம்
தாங்குவ தில்லையெனிற் கவலையில்லை!
நவிலுமுன் பெரும்பிழைக்கே - தக்க
ராசதண் டனையுண்டு! மாற்றமுண்டோ?

அரசனின் புதல்வி அவள் - எனில்
அயலவ னிடம்மனம் அடைதலுண்டோ?
சரசநி லையிலிந்நீர் - அந்தத்
தையலும் நீயும் அத் தருணமதில்
இருவிழி யாற்பார்த்தேன்! - அறி
விலஉன தொருகுடி அடியோடே
விரைவில் என் ஆட்சியிலே - ஒரு
வேர்இன்றிப் பெயர்த்திட விதித்துவிட்டேன்!

தொடரும்..







# யாருக்காக? எதற்காக?

இங்கே இறைவன் படைப்பு யாருக்காக?
என்றும் பொல்லார் கொள்ளை அடிப்பதற்காக
தங்கம் மண்ணில் கிடைத்தல் யாருக்காக?
தலைவர் பலரும் வாங்கி சேர்ப்பதற்காக
வங்கக் கடலும் இருத்தல் யாருக்காக?
வளமாய்க் கடத்தல் செய்யும் சிலருக்காக
உங்கள் வாக்கை அளித்தல் யாருக்காக?
உலகை ஏய்க்கும் மக்கள் தலைவருக்காக...

நாகம் மறைந்து வாழ்தல் யாருக்காக
நாளும் துன்பம் செய்யும் மனிதருக்காக
யாகம் மண்ணில் செய்தல் யாருக்காக?
எதுவும் இல்லா ஏழை இறைவனுக்காக
வேக நடையை நடத்தல் யாருக்காக?
வட்டி கேட்கும் குல்லா மனிதருக்காக
தாகம் தீர்க்கும் நீரும் யாருக்காக?
தண்ணீர் விற்கும் கொடியார் சிலருக்காக...

பெரிய படிப்பு படித்தல் எதற்காக?
பின்னால் நிறைய பணத்தைச் சேர்ப்பதற்காக
கரிய மேகம் வருதல் எதற்காக?
கதிரோன் கண்ணை மறைத்துக் களிப்பதற்காக
விருது சிலருக்குக் கொடுத்தல் எதற்காக?
விரும்பும் பணத்தை அவரும் கொடுப்பதற்காக
விருப்பே இன்றி வாழ்தல் எதற்காக?
விதியை நினைத்து நாளும் அழுவதற்காக...

வீட்டில் பொருட்கள் சேர்த்தல் எதற்காக?
விரும்பும் திருடர் எடுத்துச் செல்வதற்காக
காட்டில் மரங்கள் வளர்தல் எதற்காக?
காணும் தலைவர் வெட்டி எடுப்பதற்காக
நாட்டில் அரசு நடத்தல் எதற்காக?
நாளும் சிலரே கொள்ளை அடிப்பதற்காக
ஏட்டில் அறங்கள் கூறல் எதற்காக?
எவரும் படித்தல் இல்லை என்பதற்காக...

கவிஞர் இராம. பரஞ்சோதி.

# பிரார்த்தனைக் கூட்டம்




அனைத்து கிறிஸ்தவ திருச்சபை பேராயர்கள், போதகர்கள் ஐக்கிய பிரார்த்தனைக்கூட்டம் வள்ளுவர் கோட்டம் அருகில் உள்ள எபிரோன் திருச்சபையில் ( ACI - DIOCESE ) பிரதமப் பேராயர் முனைவர். எஸ். எம். ஜெயக்குமார் அவர்கள் தலைமையில் நடந்தது.



இதில் கத்தோலிக்கப் பேராயம் தென் இந்தியத் திருச்சபைப் பேராயம், ஆங்கிலிக்கன் பேராயம், அட்வன்ட் பேராயம், இந்திய சுவிஷேசப் பேராயம் மற்றும் அனைத்து சுயாதீன பேராயங்கள், அப்போஸ்தல கிறிஸ்தவ சபை, புதுவாழ்வு அசெம்பிளி ஆஃப் காட், மாரநாதா சபை, டிரினிட்டி புல் காஸ்பல், சென்னை பூரண சுவிஷேச ஐக்கியம் மற்றும் பல ஸ்தாபன தலைவர்கள் இணைந்து ஜெபித்தார்கள்.

நம் தேச நலன், சமாதானம், சகோதரத்துவம் இவைகளை வலியுறுத்தி வருகின்ற நாடாளுமன்ற தேர்தல் அமைதியுடனும், பாதுகாப்புடனும் நடைபெற அனைத்து பேராயர்களும், தலைவர்களும் ஒருங்கிணைந்து ஜெபித்தார்கள்.

தேச வளர்ச்சிக்கு கிறிஸ்தவர்களின் பங்கு மிக அதிகம் என்பதை வலியுறுத்தினார்கள்.

மாநில அரசானாலும், மத்திய அரசானாலும் கல்வி, இளைஞர்களின் வேலை வாய்ப்பு, பெண்கள் முன்னேற்றத்தில் சிறப்புக் கவனம் செலுத்தி, முக்கியத்துவம் கொடுக்க வலியுறுத்தப்பட்டது.

மதவாத, பிரிவினைவாத, பயங்கரவாத சக்திகளில் இருந்து நம்மை இறைவன் பாதுகாக்கவும், அனைவரும் ஒற்றுமையுடன் இருக்கவும் வேண்டுதல் செய்யப்பட்டது.

சிறுபான்மை மக்களின் வாழ்வுக்கு குரல் கொடுக்கும் அரசை வரவேற்பதாகவும், அதே சமயம் சிறுபான்மை மக்களின் அடிப்படை உரிமைகளையும், அவர்களுக்கு உரிய உரிமைகளை அளிக்கின்ற அரசை மட்டுமே ஆதரிக்க விரும்புவதாகவும் கூறப்பட்டது.

உலக அரங்கில் இந்திய பெருங்கண்டத்தின் வளர்ச்சியில் கல்வி, கலாச்சாரம், மருத்துவம், அறிவியல், பொருளாதாரம், சட்டம், தொழில் நுட்பம், தகவல் தொடர்பு இவைகளில் கிறிஸ்தவர் களின் பங்கை எந்த சமூகமும் மறுக்கவும், மறைக் கவும் முடியாதென்பதை அரசியல் கட்சிகளுக்குத் தெரியப்படுத்துவதாகவும் இதற்கு உரிய கனத்தையும், பங்கையும் முற்போக்கு சிந்தனையோடு வரப்போகிற அரசு மேற்கொள்ளும் என்ற நம்பிக்கையோடு பிரார்த்தனை செய்கின்றோம் என்றும் வழிபாட்டு மேடையில் கூறப்பட்டது.

டேவிட் கிறிஸ்டோபர் ஆனந்த்.

## வறுமையிலும் நேர்மை
### சாமுவேல் ஜான்சன்



புத்தக வியாபாரியின் மகனாகப் பிறந்து சிறு வயதிலேயே கண்ட மாலை என்ற உருக்குலைக்கும் நோயினால் ஒரு கண்ணை இழந்து முகத்தில் வடுக்க ளுடன் விகாரமான தோற்றத்துடன் காட்சியளித்தவர். அறிவில் அழகு ததும்ப விளங்கியவர்.

ஒரு நாள் தாயார் ஸ்தோத்திரப் புத்தகத்தைக் கொடுத்து, இதில் உள்ள பாடல்களை மனப்பாடம் செய்து ஒப்பி என்றதும் உடனே எடுத்து வாசித்து ஒரு வரிகூட விடாமல் ஒப்பித்தார். மகனின் அறிவுத் திறனைக் கண்ட தாய் வியந்தார்.

பள்ளிப் படிப்பினை முடித்ததும் தனது தந்தையின் புத்தகக் கடையில் வேலை செய்து அங்கிருந்த புத்தகங்கள் அனைத்தையும் படித்தார். பள்ளியில் ஆசிரியரானார். மாணவர்கள் அவரின் வித்தியாசமான தோற்றத்தைக் கேலி செய்ததால் வேலையை விட்டார்.

உடுத்த நல்ல ஆடையோ, காலில் போடுவதற்கு நல்ல செருப்போ இல்லாது வறுமையில் வாடினார். நண்பர்கள் தன்மீது இரக்கப்பட்டுச் செய்த உதவிகளை மறுத்தார் -_ கோபப்பட்டார். அவரது தாயார் உயிருக்குப் போராடியபோது மருத்துவச் செலவுக்குப் பணமின்றித் தவித்தார். தாயினருகில் அமர்ந்து, அபிசீனிய இளவரசர் ரசேல்ஸ் என்ற நாவலை ஏழு நாளில் எழுதினார். அதற்குச் சன்மானமாகக் கிடைத்த 100 பவுண்ட் பணம் அவரது தாயின் மரணச் செலவிற்குத்தான் பயன்பட்டது.

இவரிடம் நல்ல செருப்புக்கூட இல்லையே என வருந்திய நண்பர், புதுச்செருப்பு வாங்கி அவரது அறையின் ஜன்னல் வழியே உள்ளே போட்டுவிட்டார். வெளியில் சென்றுவிட்டு உள்ளே வந்தவர், உள்ளே கிடந்த செருப்பினைப் பார்த்ததும் எனது வறுமையைக் காரணம் காட்டி என்னை இழிவுபடுத்தியது யாரோ? என்றபடி அதனைத் தூக்கி வெளியில் எறிந்தார்.

படிப்பு படிப்பு என இருந்து சொந்தமாக குறிக்கோள் என்ற பெயரில் பத்திரிகை நடத்தினார். ஆங்கிலேயப் பல்கலைக்கழகம் இவருக்கு டாக்டர் பட்டம் கொடுத்துக் கவுரவித்துள்ளது. எல்லாவற்றிற்கும் மேலாக 7 ஆண்டுகள் அல்லும் பகலும் அயராது உழைத்து ஆங்கில மொழிக்கு அகராதி தயாரித்துப் பெருமை சேர்த்த இவர் அனைவராலும் அறியப்பட்ட சாமுவேல் ஜான்சன் ஆவார் ◆




சாமுவேல் எபினேசர், வேலூர் மாவட்டத்தலைவர்.
டி. சதீஷ்குமார், வேலூர் மாவட்டச் செயலாளர்.
எஸ். ராஜேஷ் , அரக்கோணம் நகரத்தலைவர்
வி. நாராயணன் , அரக்கோணம் நகரச் செயலாளர்
மற்றும் வேலூர் மாவட்ட உறுப்பினர்கள்.

விளம்பரம்

## முற்றம் இதழுக்கான விளம்பரக் கட்டணங்கள்

பின்னட்டை பல வண்ணம் ரூ. 10,000/-
பின் உள் அட்டை பல வண்ணம் ரூ. 7,000/-
கருப்பு வெள்ளை முழுபக்கம் ரூ. 5,000/-
கருப்பு வெள்ளை அரைப் பக்கம் ரூ. 2500/-
க. வெ. கால் பக்கம் ரூ. 1500/-

சந்தா விவரம்: தனி இதழ் ரூ. 10/-
ஆண்டு சந்தா ரூ. 120/-

# தமிழர்களின் தாகம்

# தமிழீழம்!

ஜெ. ராஜாசிங்

ஈழத்தமிழரின் வாழ்வில் தன்னை இணைத்துக் கொண்டு அவர்களுக்காக வழக்காடி, வாதாடி, அவர்களது நலனைப் பாதுகாக்கும் பணியினை தனது கடமையாக எண்ணி சுழன்று வரும் வைகோ அவர்களை, ரகோத்தம்மன் என்ற ஒருவர் தந்தி தொலைக்காட்சிப் பேட்டியில் தவறாகப் பேசியது என்பது கண்டிக்கத்தக்கது. இந்த ஆள் பதவியில் இருக்கும் போது ஒன்று பேசுகிறார். பதவியில் இல்லாதபோது ஒன்று பேசுகிறார். இவர் போன்ற கொடியவர்கள் நீதிமன்றத்தில் ஒரு செய்தியைச் சொல்லிவிட்டு நீதிமன்றத்தை ஏமாற்றிவிட்டு, ஓய்வுக்குப் பின் முன்னுக்குப் பின் முரணான தகவல்களை வெளியிட்டு நீதிமன்றத்தை அவமதித்து, நாட்டில் தேவையற்ற கலவரங்களை உருவாக்கி, தான் புகழ் பெறவேண்டும் என்ற கீழ்த்தரமான எண்ணத்துடன் அலைகின்றனர். தமிழர் அவமதிக்கப்படுவதையும், இழிவு மருத்துவத்தையும் நாம் சகித்துக் கொண்டு இருக்க முடியாது. இச்செயல் இந்தியாவில் வேறு எதேனும் ஒரு மாநிலத்தில் நடந்து இருந்தால் நீதிமன்றமே தானாக முன்வந்து அவர்கள் மீது நடவடிக்கை எடுத்து இருக்கும். இது தமிழர் பிரச்சினை என்பதால் யாரும் பொருட்படுத்தவில்லை.

1

தமிழகத்தில் நடந்த ஒரு கொலையை மையமாகக் கொண்டு ஒரு இனத்தையே பூண்டோடு அழித்த கொடுமை வரலாற்றில் எங்கும் இல்லை. இலங்கையில்தான் அரங்கேறியுள்ளது. அவர் எப்படிக் கொல்லப்பட்டார்? யாரால் கொல்லப் பட்டார்? ஏன் கொல்லப்பட்டார்? என்ற சரியான தகவல்கள் இல்லாமல் கண்மூடித்தனமாக ஒரு முடிவை தாங்களாகவே எடுத்துக் கொண்டு, அல்லது உளவு அமைப்புகள் சொல்வதைக் கேட்டு மிகப்பெரிய இனஅழிப்பு கொடூரத்தைச் செய்தவர்களை மனிதம் மன்னிக்குமா?

விடுதலைப்புலிகள் செய்தனர், திமுகவினர் செய்தனர், மதிமுகவினர் செய்தனர், அதிமுகவினர் செய்தனர், காங்கிரசார் செய்தனர் என்று ஒரு குழப்பமான கருத்தியலை உருவாக்கி, இது பற்றி இந்தியர்கள் என்ன நினைக்கிறார்கள்? எந்த முடிவுக்கு வந்திருக்கிறார்கள் என்ற முடிவிற்கான இடைவெளியை ஏற்படுத்தாமல் ஒட்டுமொத்த தமிழினத்தின் மேல் கொலைப்பழியைச் சுமத்தி, அதை இந்தியர்கள் அனைவரும் நம்புமாறு செய்து, இந்தியா மட்டுமல்லாது உலகமே அப்படி நினைக்கச் செய்தவர்கள் மன்னிக்கப்படக் கூடியவர்களா?

நம்பும்படி கதை கட்டப்பட்ட ஒரு கொலைப்பழியை தமிழர்கள் மேல் சுமத்தி, அந்த கொலைக்கு பழி வாங்குகிறோம் என்ற நினைப்பில்,



வக்கிர புத்தியில், குரூர புத்தியில் சிங்களக் காடைகளுக்கு ஆயுதங்களை அள்ளிக்கொடுத்து, ஐந்தாம் படைக்கருவிகளையும் கொடுத்து, சுமார் இரண்டு இலட்சம் மக்களைக் கொன்று குவித்ததவர்கள் மன்னிக்கப்படக்கூடியவர்களா?

அதோடு முடிந்ததா! அதற்கு முன்பும் பின்பும் எத்தனை கொலைகள், கொள்ளைகள், கற்பழிப்புகள், அவமானங்கள்! ஈழம் மட்டுமல்லாது மீன்பிடிக்கச் செல்லும் தாய்த்தமிழகத்தின் உழைப்பாளிகளான மீனவர்கள் சுடப்படுகிறார்கள். சொத்துக்கள் கொள்ளையடிக்கப்படுகின்றன, உடற்காயங்களும் மனக்காயங்களும் ஏற்படுத்தப்படுகிறது. இன்னும் சொல்லமுடியாத அக்கிரமங்கள் எல்லாம் அரங்கேறுகின்றன. அத்தனையும் நிறைவேற்றப்படுமளவுக்கு தமிழர்கள் கீழ் நிலைக்குச் சென்று விட்டோமா?

இந்திராவின் ஆட்சியில் நாடாளுமன்றத்தின் முறையான அனுமதி இல்லாமல் சில புரிந்துணர்வு ஒப்பந்தங்களுடன் பயன்படுத்திக் கொள்ள கொடுக்கப்பட்ட கச்சத்தீவில் இன்று சீன இராணுவம். அந்த ஒப்பந்தத்தில் தெளிவாக இருக்கிறது. தமிழர்களுக்கு அங்கு மீன்பிடிக்க உரிமை உண்டு. வலை காயப்போடவும் ஓய்வெடுக்கவும் உரிமை உண்டு என்று. அதை இந்திய அரசு மறுப்பதுதான் வேடிக்கையாக இருக்கிறது. மீனவர்கள் ஓய்வெடுத்துக் கொள்ளலாம், வலைகளை உலர்த்தலாம் என்று இருக்கிற போது அதைச் செய்தால் தவறு ஆகுமா? மனிதனுக்கு எப்போது ஓய்வு தேவைப்படும்? ஒரு வேலை செய்து விட்டு, அதனால் தானே களைப்பு ஏற்படும். அப்போதுதான் அந்த மனிதன் ஓய்வு எடுப்பான். ஒருவன் எங்கு வேலை செய்கிறானோ அங்குதானே ஓய்வு எடுக்க முடியும்.

ஓய்வு எடுக்க உரிமை இருக்கும்போது அந்த இடத்தில் மீன் பிடிக்க உரிமை இல்லை என்று சொல்வதில் என்ன நியாயம் இருக்க முடியும்? ஆனால் அதை இப்போதுள்ள காங்கிரஸ் அரசு மறுக்கிறது. கச்சத்தீவு சோனியாவின் சொத்தா? அல்லது ராகுல் காந்தியின் சொத்தா? அது தமிழனின் சொத்து. தமிழனின் உரிமை. நமது உரிமை மறுக்கப்படுவதற்குக் காரணம்? அந்தக் கொலைதான். அந்த நிகழ்வில் யார் யார் இருந்தார்கள் என்பதை நாம் கண்டுபிடித்து உலகத்துக்குச் சொல்ல வேண்டும். முற்றிலும் தமிழர்களை பழிக்கு ஆளாக்குவதை கண்டிக்க வேண்டும்.

தமிழுக்கும் தமிழினத்திற்கும் எதிராக எழும்பும் சக்திகள், தனி மனிதனாகவோ, கூட்டாகவோ அல்லது அமைப்பாகவோ இருக்குமானால், அவற்றை எதிர்த்துப் போராடி, அவர்களின் முகமூடிகளைக் கிழித்தெறிய வேண்டும். தமிழர்களை ஏன் இந்திய நாட்டிற்குள் இருக்கும் சிலர் வெறுக்கிறார்கள் என்றால், இயற்கையாகவே தமிழர்கள் அறிவு, திறமை, பண்பு, பாசம், இனவுணர்வு, கூரிய நுட்ப அறிவு, தொலைநோக்குப் பார்வை இவை அனைத்தும் கொண்டவர்கள் தமிழர்கள்.

இவர்கள் இருக்கும் வரை நாம் முன்னிலை பெற முடியாது. ஆகவே இவர்களை அழித்தால்தான் நாம் நம்மை உயர்த்திக் கொள்ள முடியும் என்ற குறுகிய, கொடூர மனப்பான்மை உள்ளவர்கள்தான் தமிழர்களை வெறுக்கிறார்கள். அழிக்கத் துடிக்கிறார்கள்.

இலங்கைத்தமிழர்கள் எப்போதும் இந்தியாவிற்கு ஆதரவாகவேதான் இருந்து வந்திருக்கிறார்கள். அதுதான் வரலாறாக இருக்கிறது. இந்தியத்தின் எல்லைகளில் அத்துமீறும் சீனத்தை சிங்களவன் வரவேற்று படைத்தளம் அமைக்க, தொழில் தொடங்க அனுமதித்திருக்கிறான் என்கிற நிலையில், தனக்கு ஆதரவாக இருக்கும் ஈழத்தமிழர்களை அழித்தொழிக்க இந்தியா துணைபோயிருப்பது என்பது சொந்தக் காசில் சூனியம் வைத்துக் கொள்வது போலத்தான்.

இந்தியாமீது படையெடுக்க சீனாவுக்கு இலங்கை எல்லா ஏற்பாட்டையும் செய்து கொடுத்துள்ளது. இலங்கையிலிருந்து ஒரு நாள் இந்தியாமீது சீனா போர்தொடுக்கும். அப்போது இந்தியாவிற்கு உதவி செய்யப்போவது தமிழர்களாகத்தான் இருப்பார்கள். கொரில்லா போர் முறையில் சிறந்தவர்களான தமிழர்கள், வீரத்தில், விவேகத்தில் சிறந்தவர்களான தமிழர்கள்தான் இந்தியாவிற்கு உதவுவார்கள். தமிழர்களால்தான் இந்தியா வெற்றி பெற முடியும் என்பது திண்ணம். அந்த நாள் வரும். நமது கண்கள் அந்த நாளைக் காணும்.

தொடரும்...

◆

# நமது முற்றம் இதழ் மூலம் சமுதாயப்பணி!



தோல்நோய், காசநோய்களைப் பரப்பும் நச்சுத்தன்மை உடைய "பார்த்தீனியம்" செடிகளை, அகற்றி அழிக்கும் பணி நமது முற்றம் இதழ் சார்பாக நடந்தது. முற்றம் இதழின் உதவிஆசிரியர், வழக்கறிஞர். திரு. இமயவரம்பன் அவர்கள் ஏற்பாடு செய்த இந்த நிகழ்வில், திண்டிவனம் நகர பா. ம. க. துணைச் செயலாளரும் சமூக ஆர்வலருமான குட்டி என்கிற ராகவன் தலைமையேற்றார். திரு. ஏழுமலை, சட்டப்பாதுகாப்புக்குழுவைச் சேர்ந்த வழக்கறிஞர் செ. பாலாஜி, மலர் சேகர், மா. வடபழனி, மருத்துவர். சந்தானக்கிருஷ்ணன், என். எம். கருணாநிதி, இளங்கோ படையாட்சி, வழக்கறிஞர் ஜெயராஜ் எம்.சி, சௌந்தர், சேகர், சரவணன் எம்.சி, செந்தில் எம். சி, பூதேரி ரவி இவர்களுடன் ஐம்பதுக்கும் மேற்பட்ட இளைஞர்களும் பல சமூக ஆர்வலர்களும் கலந்து கொண்டனர்.

"பார்த்தீனியம் செடிகளை அழித்திடுவோம், காசநோயிலிருந்த மக்களைக் காத்திடுவோம்" என்ற வாசம் அடங்கிய துண்டுப் பிரசுரங்களை சமூக ஆர்வலர்கள் மக்களிடம் வழங்கினார்கள்.

இதுபோன்ற சமுதாயப்பணிகளை முற்றம் இதழ் மூலமாக நடத்துவதில் மகிழ்ச்சி அடைகிறோம். இந்நிகழ்ச்சியை சிறப்பாக நிறைவேற்றிய முற்றம் உதவி ஆசிரியர் வழக்கறிஞர் இமயவரம்பன் அவர்களை முற்றம் இதழ் பாராட்டுகிறது.



# தெய்வத்திரு
## J.S.R. சீநிவாச முதலியார்



*தோற்றம் :15.04.1923 மறைவு : 26.04.2004*

புகழுடனே தோன்றவேண்டும் என்று ரைத்தார்
பொதுமறையில் வள்ளுவரும் அந்த நாளில்
அகமகிழ்வாய் இல்லறத்தை நடத்தி என்றும்
அழியாத புகழினையே அடைந்தீர் மண்ணில்
மிகநன்றாய் வாரிசுகள் வாழ வென்றே
மேதினியில் வழிவகைகள் செய்து சென்றீர்
முகமலர்ந்தே எதிரியிடம் கூடத் தாங்கள்
மொழிகின்ற பண்பினையே ஏற்று நின்றீர்.

நம்முன்னோர் தோற்றுவித்த தொன்மைச் சங்கம்
நன்றாக வளர்ந்திடவே உழைத்து நின்றீர்
இம்மண்ணில் சிலவாண்டு தலைமை ஏற்றே
ஏற்றமுடன் நடத்தினீர்கள் சங்கம் தன்னை
உம்மைநன்றே மறவாமல் போற்று கின்றார்
உளத்தாலே உறவினர்கள் பல்லோர் இன்றும்
எம்மையெலாம் ஏற்றமுடன் வாழ என்றும்
இறையாக இருந்துகாக்க வேண்டும் நன்றே.

**J.S.R.சீனுவாச முதலியார் குடும்பத்தினர்,**
**உறவினர்கள், நண்பர்கள்**
58, வடக்கு மாட வீதி, நுங்கம்பாக்கம்,
சென்னை&34. 72000- 44783

கவிதையாக்கம் :
**"கவியருவி" இராம.பரஞ்சோதி,**
பொழிச்சலூர்.

**கைபேசி**

என்னுடைய கைபேசி
என்னைப் பார்த்துக் கேட்டது!
நீங்கள் இருவரும் இன்று
தூங்குவீர்கள் என்னைத் தொடாமல்,
விழித்துப் பார்ப்பேன்!
இன்று நீ என்னைத் தொடாமல்
இருந்தால்!
நாளை அவர் உன்னைத் தொடுவார்!
காதலன்! போன் வை என்றான்
காதலி நானோ, காதில் அழுத்தி வைத்தேன்!
இன்னும் சில பொன் சொற்கள்
இனிமையாய் கேட்காதா? என்று!

**இரயில் பயணம்**

வாழ்க்கையில் யாரும்
இல்லையென்று
அழுது கொண்டிருந்தேன்
ஜன்னல் ஓரமாக! - பின்பு
வெளியில் பார்த்தேன்
நிலவு என்னுடன் வருவதைக்
கண்டேன்!


**எம். கீதா.**
செஞ்சிக்கோட்டை

**ஏப்ரல் 1**




ஏப்ரல் ஒன்றாம் தேதி
ஏமாறுகிறேன் பலரிடம்
ஏன்?
ஏமாற்றுவதால்
அவர்களுக்கு மகிழ்ச்சி
அவர்கள் மகிழ்வதால்
எனக்கும் மகிழ்ச்சி!

**காட்டான்.**




## உங்கள் மொபைல் எண் மறந்துவிட்டதா உங்கள் மொபைல் என் திரையில் தோன்ற....

Idea சேவையைப் பயன்படுத்துவர்கள் *1#
Bsnl சேவையைப் பயன்படுத்துவர்கள் *888#
Aircel சேவையைப் பயன்படுத்துவர்கள் *131#
Videocon சேவையைப் பயன்படுத்துவர்கள் *1#
Airtel சேவையைப் பயன்படுத்துவர்கள் *121*9#
Reliance சேவையைப் பயன்படுத்துவர்கள் *1#
Virgin mobile சேவையைப் பயன்படுத்துவர்கள் *1#
Vodafone சேவையைப் பயன்படுத்துவர்கள் *131*0#
Tata docomo சேவையைப் பயன்படுத்துவர்கள் *580#

ச. உதயகுமார்.

## வெயிலை தணிக்கும் குளிர்பானம்



நம் முன்னோர்கள் ஆண்டாண்டு காலமாக பயன்படுத்தி வந்த பல வகையான உணவுகள் தற்போது இருந்த இடம் தெரியாமல் மறைந்துவிட்டது. ஒருகாலத்தில் நம் முன்னோர்கள் உடல்சூட்டை தணிக்க நீர்மோர், கேழ்வரகுகூழ், போன்ற எளிய உணவுகளை சாப்பிட்டனர், இதனால மிகவும் ஆரோக்கியமான வாழ்க்கை நிலையை அடைந்தனர். தற்போது, வெயில் காலம் தொடங்கிவிட்டது. உடலுக்கு குளிர்ச்சி தரும் கேழ்வரகுகூழின் விற்பனை ஒருபுறம் அமோகமாக இருக்க, ஒருபக்கம் குளிர்பான வியாபாரமும் களைகட்டி வருகிறது.

உடலுக்கும், மனதுக்கும் சக்தி கொடுக்கும் ஒரு ஜில்லீர் பானம் தற்போது விற்பனையாகிக்கொண்டு இருக்கிறது. அதன் பெயர் "மோலாசம்", அது என்ன மோலாசம் என்ற கேள்வியோடு குளிர்பானக்கடையை நடத்திவரும் செல்வி என்பவரிடம் கேட்டோம், அது குறித்து ஆர்வத்தோடு அவர் கூறுகையில், வெள்ளை புட்டரிசி, பன்னீர், தேங்காய்பால், கல்யாண முருங்கை இலை, ஆகிய எளிய பொருட்களைக்கொண்டு தயாரிக்கப்படுவதுதான் மோலாசம்.

இதை தினமும் குடித்து வந்தால் உடல்சூடு முழுவதும் குணமடையும். மேலும் பெண்களுக்கு ஏற்படும் பிரச்சனைகள், கண் எரிச்சல், அடிவயிற்று வலி, வயிற்றுபுண், உடல் சோர்வு, போன்ற பல்வேறு உடல் உபாதைகளுக்கு சிறந்த இயற்கை மருந்தாக பயன்படுகிறது. இந்த பானத்தை வீட்டிலேயே தயாரிக்கலாம். மேலும் வெயில் காலத்திற்கு மிகவும் சிறந்த குளிர்பானவகை என்றார்.

செய்முறை: வெள்ளை புட்டரிசி (அ) உயர்தர பச்சரிசியை, பயன்படுத்துவதற்கு முன்பாக ஒருநாள் முழுவதும் பன்னீரில் ஊறவைக்கவேண்டும், அதில் கல்யாண முருங்கை இலைகளின் நரம்புகளை நீக்கி வெறும் இலைகள் மட்டும் 2ல் இருந்து 5 இலைகள் வரை சேர்த்துக்கொள்ள வேண்டும், மறுநாள் காலையில் பயன்படுத்தலாம். இதனுடன் தேவையான அளவு சர்க்கரை கலந்து தேங்காய்பால் ஊற்றி சாப்பிடலாம். ◆

**அருணகிரி**, தாயகம்.

மதிமுக தேர்தல் அறிக்கை விவாதத்திற்கு உள்ளாகி இருக்கிறது. இந்தியாவின் பெயரை மாற்ற வேண்டும். வைகோ அபத்தம் என்று ஒரு ஏடு எழுதுகிறது. அறிக்கையை நூலாக ஆக்கியவன் என்ற முறையில் ஒரு சிறு விளக்கம் தர விழைகிறேன்.

வைகோ இந்தக் கோரிக்கையை இப்போது எழுப்பவில்லை. ம தி மு க மாநாடுகளில் நிறை வேற்றப் பட்ட தீர்மானத்தை மேற்கோள்காட்டி, மாநில சுயாட்சி கொள்கையை முன்வைத்து இந்திய நாடாளுமன்ற மக்கள் அவையில் வைகோ அவர்கள் தாக்கல் செய்த தனிநபர் மசோதா மீதான இரண்டாவது விவாதத்தில் உரை ஆற்றுகையில், 2012 மார்ச் 22ஆம் நாள் ஆற்றிய உரையில் இந்தக் கோரிக்கையை வலியுறுத்திப் பேசி இருக்கிறார்.



அந்த உரையை நான் ஏற்கனவே ஒரு நூலாகத் தொகுத்த 2010 ஆம் ஆண்டு செப்டம்பர் 15 ஆம் நாள் காஞ்சி மாநாட்டில் வெளியிட்டு இருக்கிறேன்.

1947க்கு முன்பு இந்தியா என்று ஒரு நாடே கிடையாது. பரதகண்டம் என்றும் அதில் 56 நாடுகள் 565 சிற்றரசுகள் என்றும்தான் வட இந்திய இலக்கியங்கள் குறிப்பிடுகின்றன. இந்தியா என்ற சொல்லே கிடையாது. வெள்ளைக்காரர்கள் தான் இந்த நாட்டுக்கு இந்தியா என்று பெயர் கொடுத்தார்கள்.

தமிழ்நாட்டின் புதுக்கோட்டை சமஸ்தானம், ஹைதராபாத் நிசாம் சமஸ்தானம், மைசூர், திருவாங்கூர் சமஸ்தானங்கள் 1947 ஆம் ஆண்டு வரையிலும் தனி நாடுகளே, வெள்ளையர்கள் ஆட்சி அங்கே கிடையாது. இராணுவத்தைக் காட்டி மிரட்டித்தான் மேற்கண்ட நாடுகளை இந்தியாவுக்குள் இணைத்தார்கள்.

விடுதலையின் போதுமாநிலங்களிடம் இருந்த கல்வி உள்ளிட்ட பல அதிகாரங்களை படிப்படியாக மத்திய அரசு பறித்துக் கொண்டது.

இப்போது ம தி மு க தனிநாடு கேட்கவில்லை. மாநிலச் சட்ட மன்றங்களின் ஒப்புதலைப் பெறாமல், நாடாளுமன்றத்தில் தீர்மானங்களை நிறைவேற்றிக் கொண்டு, மாநிலங்களிடம் இருந்து பறித்துக் கொண்ட அதிகாரங்களைத் திருப்பித் தாருங்கள். மாநிலங்களுக்குக் கூடுதல் அதிகாரங்கள் வேண்டும் என்றுதான் கேட்கிறது.

இந்தக் குரலை மம்தா, நிதிஷ், நவீன்பட்நாயக் போன்றோர் எதிரொலிக்கின்றனர். அகாலிதளம் 1920 லேயே தீர்மானம் போட்டு இருக்கிறது. மேலும் விரிவாக அறிந்து கொள்ள விழைவோர் நான் எழுதிய கட்சிகள் உருவான கதை (விகடன் பிரசுரம்) நூலைப் படிக்கவும்.

# மாநிலங்களுக்குக் கூடுதல் அதிகாரங்கள் வேண்டும்

# மண்ணும் மொழியும்



முக நூலில் நண்பர் ஒருவர் பதிவேற்றி ருந்தார். பெயர் தெரியவில்லை. (மன்னிக்கவும்) அவர் வெளிநாடு சென்றபோது அங்கு நடந்த நிகழ்வை விவரிக்கிறார்..

வாசகர்கள் தெரிந்து கொள்ளவே இக்கட்டுரை

இன்று ஒரு நிகழ்ச்சிக்கு சென்றிருந்தேன். அங்கே சந்தித்த எனது நெருங்கிய நண்பனொருவன் தனது கல்லூரி நண்பன் என்று இன்னொரு புதியவரை அறிமுகப்படுத்தி வைத்தான். புதியவருடன் வழமையாக ஆரம்பித்தது எனது உரையாடல். அதனை வைத்துப் பார்க்கும் போது , மருத்துவரான அவர் தாயகத்திலிருந்து சமீபத்தில் தான் அவுஸ்திரேலியாவுக்கு புலம்பெயர்ந் திருக்கிறார் என்பதைப் புரிந்து கொண்டேன்.

இங்கு புலம்பெயரும் மருத்துவர்கள், முதல் சில வருடங்களுக்கு சிட்னி போன்ற பெரிய நகரங்களில் வேலை செய்ய முடியாது பெரு நகரங்களில் இருந்து பல மணிநேரப் பயணத்தின் பின் வரும் சிறு நகரங்களிலோ அல்லது நகரம் சார்ந்த கிராமப்புற மக்களிற்கோதான் அவர்களின் முதல் சேவை வழங்கப்பட வேண்டும் என்பது அவுஸ்திரேலிய அரசின் கட்டாய சட்டம். இந்த சட்டம் அவருக்கு அவ்வளவாகப் பிடிக்கவில்லையென்பதை தனது அதிருப்தி மூலம் காட்டிக் கொண்டார். என்னசெய்வது. மேற்குலகில், மருத்துவர்கள், சேவை நோக்கம் ஒன்றிற்காகவே உள்வாங்கப்படு கின்றார்கள் என்பதை விரும்பியோ விரும்பாமலோ அவர் ஏற்றுக் கொண்டுதானே ஆகவேண்டும்.

சுமுகமான உரையாடலுக்குப் பின், மிகவும் நெருங்கிய நண்பராகிவிட்ட அவர் கேட்ட கேள்வி, வழமைபோல என்னை சங்கடத்தில் ஆழ்த்தியது. அவர் கேட்ட கேள்வி :

அது எப்படி புலம்பெயர்ந்து இத்தனை வருடங்களாகியும் தமிழை அழகாக , சுத்தமாக கலப்பில்லாமல் கதைக்கிறீர்கள் ( பேசுகிறீர்கள் ) என்பதே ???

. இந்தக் கேள்வி பல இடங்களில் பலரிடத்தில் உருவாகியதை நான் பார்த்திருக்கிறேன். நான் எனது சொந்த மொழியை அதே மொழியைத் தாய் மொழியாகக் கொண்ட இன்னொருவருடன் கலப்படமில்லாமல் பேசும் போது ஆச்சரியப்பட என்ன இருக்கின்றது ? எனது தாய் மொழியுடன் இன்னொரு மொழியைக் கலந்து பேசினால்தானே

ஆச்சரியப்பட வேண்டும் ??? ஏன் எம்மவர்கள் இந்த விடயத்தில் தலைகீழாகவே இருக்கிறார்கள்.

தமிழை தாய்மொழியாகக் கொண்டுள்ள ஒருவர் அந்த மொழியைப்பேசும் போது வேற்று மொழிக் கலப்புடன்தான் பேச வேண்டும் என்ற நிலை தமிழுக்கு வந்துவிட்டதா ? அப்படித்தான் நான் கருதுகின்றேன். இல்லாவிட்டால் ஏன் கலப்பில்லாத தமிழைப் பேசுவது ஆச்சரியத்துடன் பார்க்கப்படுகின்றது ?

அந்த நண்பர் கேட்ட கேள்வி, , நான் பெரிதாக மதிக்கும் கவிக்கோ அப்துல் ரஹ்மான் அவர்கள், மொழியைப் பற்றி மேற்கு நாட்டு அறிஞர் ஒருவர் கூறிய ஒரு கருத்தை முன்னிலைப்படுத்தி, பல வருடங்களுக்கு முன்பு ஆனந்த விகடன் இதழில் விளக்கமாகக் கொடுத்திருந்த பேட்டி ஒன்றை, இங்கே நினைவுபடுத்தும் உத்வேகத்தைக் கொடுக்கிறது. அதன்படி

"ஒரு இனத்தை அழிக்க வேண்டுமென்றால் அந்த இனத்தின் மொழியை அழித்தால் போதுமானது. காலப்போக்கில் அந்த இனமே இல்லாது போய்விடும்."

உண்மைதான், எனது மொழியின் இன்றைய நிலையைப் பார்க்கும் போது அதன் எதிர்காலம், அல்லது எங்களின் அடுத்த சந்ததி அதற்குக் கொடுக்கப்போகும் முக்கியத்துவம் எப்படியிருக்கப் போகிறதோ என்ற பலருக்குள் இருந்தும், இதுவரை எனக்குள் இருக்காத வேதனை மெல்ல மெல்ல எட்டிப்பார்க்கத் தொடங்கிவிட்டதை உணர்கிறேன்.

எப்படியான சவால்களை எதிர்கொண்டாலும் பல பாரம்பரியங்களைக் கொண்ட எந்த மொழியும் அழியாது என்று எம்மில் பலர் நம்புவதை அவர்கள் கூறவும், எழுதவும் கேட்டுள்ளேன். ஆனால் தமிழைப் போல பல பாரம்பரியங்களைக் கொண்ட பல மொழிகள் அழிந்த வரலாறுகள் உலகில் உண்டு. அதைப்பற்றி 2006ம் ஆண்டில் , One India என்ற இணையத்தில், வெளிவந்திருந்த கட்டுரை யொன்றின் முக்கிய சில பகுதிகளை மட்டும் தேடி யெடுத்து கீழே பதிகிறேன். அதில் இருக்கும் ஆதாரங்களை கண்டிப்பாகப் படித்துப்பாருங்கள்:

அழிந்து வரும் மொழிகள் பற்றி ஆய்வு செய்து வரும் இங்கிலாந்துப் பேராசியர் ப்ரூஸ் கோனெல் மொழிகளின் இறப்பு எனும்கட்டுரையில் இப்படிக் குறிப்பிடுகின்றார் :

துருக்கியின் எல்லைப்பகுதியான கசாக்கின் வட மேற்குப் பகுதியில் பேசப்பட்டு வரும் உபைக் மொழியின் கடைசி வாரிசான டிப்விக் செங் என்பவரை சில ஆண்டுகளுக்கு முன்சந்தித்தேன். அவருக்கு மூன்று மகன்கள். யாருக்கும் உபைக் மொழியைப் பேசத் தெரியாது. புரிந்து கொள்வது கூடச் சிரமம். அவர்களுக்குத் துருக்கிய மொழியை மட்டுமே தெரியும். அவர்கள் அவர் இறக்கும் முன்பே அவருக்கான கல்லறைவாசகங்களைத் தயாரித்து விட்டனர். அதில் இப்படி எழுதப் பட்டிருந்தது. 'இதுதான் டிப்விக் செங்கின் கல்லறை. உபைக் மொழியின் கடைசி வார்த்தை இவரால் தான் உச்சரிக்கப்பட்டது'.

1992ல் செங்இறந்தார். அவருடன் அவரது உபைக் மொழியும் புதையுண்டு போனது.

'1994ல் கொமிரான் நாட்டின் மம்பிலாக் பகுதியில் பல அற்புதமான மொழிகளைக் கேட்டேன். கசாபி எனும் மொழிபேசும் ஒரே மனிதராகப் போகோன் என்பவர் மட்டுமே இருந்தார். 1995ல் நான் மீண்டும் கொமிரான் சென்றேன். போகோன் இல்லை. அவருடன் கசாபியும் இறந்து போனது. அவரது பேச்சைப் புரிந்து கொள்ளக் கூடியவராக இருந்த அவரது சகோதரி மட்டுமே உயிருடன் இருக்கிறார். அவருக்கும் அம்மொழியைப் பேசத்தெரியாது. அந்த வம்சத்தில் இனி அம்மொழி பேச யாருமே இல்லை' என்கிறார்.

ஒரு மொழி சாகும்போது, உயிர்த் துடிப்புள்ள ஒரு உலகையே இழந்து போகிறோம். மொழி அந்த வட்டாரத்தின் அறிவு, ஞானம்,வழக்கு, இயற்கை, உயினம் குறித்த அனைத்தையும் உட்கொண்ட ஞானச் செல்வம். மொழியின் சாவு இனத்தின் உயிர்த் துடிப்பின்சாவாகும்.

உலகில் 6,700 மொழிகள் பேசப்படுகின்றன. பேசும் மொழிகள் அனைத்தையும் கண்டுபிடித்துப் பட்டியலிடப்படவில்லை.இந்தோனேசியா, பப்வா கினியா, தென்னாப்பிரிக்கா, மத்திய ஆப்பிரிக்கா ஆகிய பகுதிகளில் இன்றும் புதிய புதிய மொழிகள் கண்டுபிடிக்கப்படுகின்றன.

ஒரு மொழியைப் பேசும் மக்களினம் இயற்கை யாகவோ, செயற்கையாகவோ கொல்லப்பட்டால், அவர்கள் சார்ந்த மொழிஇயற்கையான சாவை

எட்டி விடுகிறது. ஒரு நாடு தேசியப் பொதுக் கொள்கை, தேசிய மொழி, மையப்படுத்துதல், வளர்ச்சி, வசதி,உயர்கல்வி நவீனமயமாதல், முன்னேற்றம், பொருளாதாரம் என எத்தனையோ காரணங்களை முன் வைத்து மக்களின் பன்முகத் தன்மையையும் அவர்களின் கலாச்சார வெளிப் பாடான மொழிகளையும் அழிக்கலாம்

. உலகின் கலாச்சாரங்களின் வெளிப்பாடான மொழிகளின் சாவுக்கு உலகமயம் ஒரு முக்கியமான காரணமாக உருவெடுத்துவருகிறது. தொழில்நுட்பப் படையெடுப்பு மொழியின் சாவை விரைவு படுத்துகிறது. பெரும்பான்மையினரின் மொழி யின் ஆதிக்கம், மொழிகளின் இன வழித் தனித் தன்மையின் அழிவுக்குக் காரணமாகிறது.

கனடாவில் வந்தேறிய ஆங்கிலம், அம்மக்களின் இனக்குழு மொழிகளை வென்றது. தென் அமெரிக்காவில் ஸ்பானிஷ், போர்ச்சுகீஸ் மொழிகள் பழங்குடிகளின் மொழிகளைக் கொலை செய்தன. இந்தியாவில்வெள்ளையருடன் வந்த ஆங்கிலம், சுதேசி மொழிகளை அழித்தது பழைய வரலாறு. இன்று இந்தி, சமஸ்கிருதம் அந்த இடத்தைப் பெறுவதும், மொழிகளின் அழிவின் தொடர்ச்சி யாகவே இருக்கும்.

நாங்கள் ஒன்றில் மொழி வெறியர்களாக இருக்கிறோம் அல்லது மொழியைப்பற்றி அக்கறையற்றவர்களாக இருக்கிறோம். இரண்டுமே தப்பு. எங்களின் மொழியில் பற்றுடன் இருப்பது மிக அவசியமான ஒன்று .. அதற்கு என்ன செய்துள்ளோம் .. எதிர்காலத்தில் என்ன செய்யப் போகிறோம் ??

◆

## கல்லூரி ஆண்டு விழா




அரக்கோணம் ஜெயா ஆர்ட்ஸ் &    சயின்ஸ் கல்லூரியில் பிபிஎ மாணவர்கள் படிப்பை நிறைவு செய்ததன் பொருட்டு விழா ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அவ்விழாவில் முற்றம் இதழின் துணை ஆசிரியர் திருமதி அ. உமாமகேஸ்வரி அவர்கள் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டார். வேலை வாய்ப்புகள் பற்றி எடுத்துக்கூறி மாணவர்களுக்கு பரிசுகளை வழங்கினார்.

கல்லூரியின் முதல்வர் திரு. எஸ். பீட்டர், திரு. பாஸ்கர், மற்றும் பேராசிரியர்கள் கலந்து கொண்டனர்.

# தேர்தல் கும்பிடு

உயிரொலி



மனதுக்கு
பிடிக்கவில்லை
என்றாலும்
மணிக்கணக்கில்
கும்பிடு

நண்டு, சிண்டு
நத்தை, நாரை
எல்லாத்துக்கும்
கும்பிடு

ஓட்டு இல்லாதோர்க்கும்
கும்பிடு
ஓட்டளிக்கத் தெரியாதோர்க்கும்
கும்பிடு

தலைவர் அறிமுகப்படுத்துகையில்
தலையெழுத்தே என்று
தொடர் கும்பிடு

வாக்கு கேட்க
தலைவர்களோ
பேச்சாளர்களோ
வந்துவிட்டால் – கை
வலிக்க வலிக்க
கும்பிடு

வருகிறவர் போகிறவர்
எல்லோருக்கும் கும்பிடு

சிலநேரம்
காலில் விழுந்தும்
கும்பிடு

ஓட்டுப்போடுங்க என்று
கத்திக் கத்தி
கும்பிடு

வென்றதும்
வட்டியும் முதலுமாய்
மக்கள் போடுகின்றனர்
கும்பிடு
கும்பிடோ கும்பிடு.

விஜயலெட்சுமி
உதவி ஆசிரியர், ஒன் இந்தியா தமிழ் இணைய இதழ்



# "டிப்ரஷன்" நோயால் வாழ்க்கையை இழந்து தவிக்கும் இளைஞர்கள்

இன்றைய விரைந்து ஓடும் கால கட்டத்தில் எய்ட்ஸ், புற்றுநோய் போன்ற கொடிய நோய்களையெல்லாம் தூக்கி சாப்பிட்டுக் கொண்டிருக்கின்றது ஒரு புது வியாதி. குறிப்பாக இளைஞர்களைத் தாக்கும் இவ்வியாதி கிட்டதட்ட அவர்களை அழிவுப்பாதையிலேயே தள்ளி விட்டு விடுகின்றது. உடலில் ஏற்படும் நோய்க்கு கூட மருந்து உண்டு. ஆனால், "டிப்ரஷன்" என்று அழைக்கப்படும் இம் மனச்சிதைவு நோய்க்கு மருந்து இருந்தாலும் அது பலனளிப்பதில்லை.

**தவறான எண்ணங்கள்:**

மாறிவரும் கால கட்டத்தில் வாழ்க்கை என்பது இளைஞர்களைப் பொறுத்தவரை காதல் பூக்கும் உலகம், பணம் காய்க்கும் தொழில், நாகரிக அரக்கன் என்றவைகளை மட்டுமே கொண்ட ஒன்றாக நினைக்க வைத்துள்ளது.

**எல்லைமீறும் ஆசைகள்:**

ஆனால், அந்த அளவுகடந்த ஆசைகளில் எல்லைமீறிப்போய் அவர்கள் செய்யும் சில காரியங்கள்தான் அவர்களுடைய வாழ்க்கையையே அழித்து விடுகின்றது. பெற்றவர்களின் அன்பெல்லாம் அவர்களுக்கு ஒரு பொருட்டாகவே தெரிவதில்லை.

**டிப்ரஷன் என்னும் "எமன்":**

அவர்களைப் பொறுத்தவரையில் கைநிறைய சம்பளம் வாங்கும் நான் ஏன் பெற்றோரை மதிக்க வேண்டும் என்ற எண்ணம் வந்து விடுகின்றது. அதில் எல்லை மீறிப் போய் , காதல் படுகுழியில் விழுந்து, வாழ்க்கையின் தாத்பரியங்கள் புரியாமல்

எல்லாவற்றையும் இழந்து கடைசியில் 'டிப்ரஷன்' என்ற காலனுக்குள் சிக்கி காணாமலே போய் விடுகின்றனர்.

### கூடா நட்பு கேடாய் முடியும்:

சரி அப்படி ஒன்றுஇரண்டு பேர் தங்களின் நிலை புரிந்து, பாலின வேறுபாடுகளைக் கடந்து நல்ல நட்புடன் இருந்தாலும் மற்றவர்கள் விடுவதில்லை,நண்பனுக்கு உதவி செய்கின்றேன் என்ற பெயரில் அவர்களின் மனதை தூண்டி தவறான விசயங்களை விதைத்து விடுகின்றார்கள்.

### வாழ்க்கை இழப்பு:

விளைவு எல்லாவற்றையும் இழந்து, மனச்சிதைவுக்கு உள்ளாகி, சரியான முடிவு எடுக்க முடியாமல் வாழ்க்கையையே தொலைத்து விடுகின்றனர்.

### குடும்பம்தான் மருந்து:

குடும்ப சூழல், கூட்டுக்குடும்பம் என்ற முடிச்சுகள் நம்மை கட்டிப்போடுவதற்காக ஏற்படுத்தப் பட்டதல்ல. நம்முடைய வாழ்க்கை எப்போதும் தறிகெட்டு போய்விடக் கூடாது என்பதற்காக உருவாக்கப் பட்ட சொர்க்கங்கள் அவை. வாழ்க்கை முழுதும் நமக்காக அர்ப்பணித்த பெற்றோருக்கு கண்டிப்பாக நமக்கு எது நல்லது என்பதையும் தெரிய வைக்க முடியும்.

### மனச்சிதைவுக்கு மருந்து:

எனவே, இளைஞர்கள் இதுபோன்ற சிக்கல்களில் சிக்கி, சிதைந்து தற்கொலை முடிவிற்கு போகும் நிலைமையை தடுக்க ஒரே வழி குடும்பத்தினர் காட்டும் பரஸ்பர பாசம் மற்றும் அன்பால் மட்டும்தான் முடியும். வாழ்க்கையை புரிந்து அவர்களுடைய எல்லைகளை வகுத்துக் கொள்ள வேண்டும். இது தான் இம்மனச்சிதை நோய்க்கு ஒரே மருந்தாகும்.

மேலும் படிக்க: http://tamil.oneindia.in/authors/vijayalakshmi.html

## மசாலா ஓட்ஸ் ரெசிபி



தற்போது டயட்டில் இருப்போர் காலையில் ஓட்ஸை தான் பெரும்பாலும் சாப்பிடுகிறார்கள். அதிலும் வெறும் பால் ஊற்றி தான் சாப்பிடுவார்கள். ஆனால் இங்கு அந்த ஓட்ஸை எப்படி உப்புமா போன்று செய்து சாப்பிடுவது என்று கொடுத்துள்ளோம். அதைப் படித்து செய்து பார்த்து எப்படி இருந்தது என்று எங்களுடன் பகிர்ந்து கொள்ளுங்கள்.

**தேவையான பொருட்கள்:**

ஓட்ஸ் - 2 கப் வெங்காயம் - 1/2 (நறுக்கியது) இஞ்சி பூண்டு பேஸ்ட் - 1 டீஸ்பூன் கடுகு - 1/2 டீஸ்பூன் கறிவேப்பிலை - சிறிது பச்சை மிளகாய் - 2 (நறுக்கியது) தக்காளி - 1 (நறுக்கியது) மஞ்சள் தூள் - 1 சிட்டிகை கரம் மசாலா - 1 டீஸ்பூன் கேரட் - 100 கிராம் (பொடியாக நறுக்கியது) பீன்ஸ் - 100 கிராம் (பொடியாக நறுக்கியது) குடைமிளகாய் - 1/2 (நறுக்கியது) எண்ணெய் - 1 டேபிள் ஸ்பூன் உப்பு - தேவையான அளவு

**செய்முறை:**

முதலில் குக்கரில் நறுக்கி வைத்துள்ள காய்கறிகளைப் போட்டு, சிறிது தண்ணீர் மற்றும் உப்பு சேர்த்து, 1 விசில் விட்டு இறக்க வேண்டும். பின்னர் ஒரு வாணலியை அடுப்பில் வைத்து, அதில் எண்ணெய் ஊற்றி காய்ந்ததும், கடுகு, கறிவேப்பிலை மற்றும் பச்சை மிளகாய் சேர்த்து தாளித்து, வெங்காயத்தைப் போட்டு 2-3 நிமிடம் மிதமான தீயில் வதக்க வேண்டும். பிறகு அதில் இஞ்சி பூண்டு பேஸ்ட் சேர்த்து சிறிது நேரம் வதக்கி, பின் அதில் தக்காளியை, உப்பு, மஞ்சள் தூள் மற்றும் கரம் மசாலா சேர்த்து வதக்கி, அத்துடன் வேக வைத்துள்ள காய்கறிகளை நீருடன் சேர்த்து ஊற்றி ஒரு கொதி விட்டு, பின் அதில் ஓட்ஸை சேர்த்து 5 நிமிடம் தண்ணீர் வற்றும் வரை வேக வைத்து இறக்கினால், சுவையான ஓட்ஸ் மசாலா ரெடி!!!

Read more at: http://tamil.boldsky.com/recipes/veg/masala-oats-breakfast-005603.html



# உங்கள் மீதான அடக்குமுறை ஏன்?




— ச. உதயகுமார்.

அம்பேத்கர் அவர்கள் தலித் மக்கள் பற்றி பேசிய மாநாட்டு பேருரையிலிருந்து....

உங்கள் சொந்த பலத்தை மட்டுமே நீங்கள் நம்பி இருந்தால், இந்துக்களின் கொடுங்கோன் மையை முறியடிக்க ஒருபோதும் முடியாது என்பதே என் முடிவாகும். நீங்கள் பலமற்றவர்கள் என்பதாலேயே ஒடுக்கப்பட்டிருக்கின்றீர்கள் என்பதில் எனக்குச் சிறிதளவும் அய்யமில்லை. நீங்கள் மட்டும் சிறுபான்மையினர் அல்ல. இசுலா மியர்களும் உங்களைப் போன்று சிறுபான்மை யினரே. ஆனால், இசுலாமியர் களுக்குத் துன்பம் விளைவிக்க எவரும் துணி வதில்லை.

ஒரு கிராமத்தில், இரண்டு இசுலாமியர்களின் வீடுகள் மட்டும் இருப்பினும் அவர்களுக்கு இன்னல் விளைவிக்க ஒருவரும் துணிவதில்லை. ஆனால், உங்களுக்குப் பத்து வீடுகள் இருந்தும் ஒட்டுமொத்தமாக அந்தக் கிராமமே உங்களுக்கு எதிரான அடக்குமுறையில ஈடுபடுவது ஏன்? இதற்குத் தகுந்த பதிலை நீங்கள் கண்டாக வேண்டும். இதற்கு ஒரே பதில்தான் உண்டு என நான் கருதுகிறேன்.

ஒரு கிராமத்தில் வாழும் இரண்டு இசுலாமியர் களுக்குப் பின்னால், இந்தியாவின் அனைத்து இசுலாமியர்களின் பலமும் திரண்டு நிற்கின்றது என்பதை இந்துக்கள் மிக நன்றாகவே உணர்ந்துள்ள னர். எனவேதான், இசுலாமியர் களைத் தொட அவர் களுக்குத் துணிவில்லை. அந்த இரண்டு இசுலாமியக் குடும்பத்தினரும் அச்சமற்று சுதந்திரமாக வாழ்கின் றனர். ஏனெனில், இந்துக்கள் அவர்களுக்கு எதிராகக் கொடுமை விளைவிப்பர் என்றால் பஞ்சாப் முதல் சென்னைவரையுள்ள இசுலாமிய சமுதாயமே, என்ன விலை கொடுத்தும் பாதுகாப்பிற்குத் திரண்டு வரும் என்பதை அவர்கள் நன்கு உணர்ந்துள்ளனர்.

அதே வேளை, உங்களுக்கு உதவ ஒருவரும் முன்வர மாட்டார்கள் என்பதும், எவ்விதப் பொருளுதவியும்

உங்களுக்குக் கிடைக்காது என்பதும் இந்துக்களுக்குத் தெரியும். காவல் துறையும் சாதி இந்துக்களுக்குச் சார்பாகவே உள்ளது. இந்துக்களுக்கும் தீண்டத்தகாத மக்களுக்கும் இடையே மோதல் ஏற்படும் எனில், அவர்கள் தமது கடமையைவிட தாங்கள் சார்ந்துள்ள சாதிக்கே அதிக நன்றியுடையவர்களாக இருக்கின்றனர். நீங்கள் உதவியற்று இருப்பதாலேயே இந்துக்கள் உங்களுக்கு எதிராக அநீதியையும், கொடுமைகளையும் இழைக்கின்றனர்.

எனவே, பலமின்றி கொடுமையை சந்திப்பது இயலாத ஒன்றாகும். இரண்டு, கொடுமையைச் சந்திக்கப் போதிய பலத்தை நீங்கள் பெற்றிருக்கவில்லை. மூன்று, இவ்விதக் கொடுமை களை முறியடிக்கத் தேவைப்படும் பலத்தை நீங்கள் வெளியிலிருந்து பெற்றாக வேண்டும். இதை எவ்வாறு பெறப்போகின்றீர்கள்? என்பது மிக முக்கியமான ஒரு கேள்வியாகும். ஒரு தலைச் சார்பின்றி நீங்கள் இது குறித்துச் சிந்திக்க வேண்டும்.

மதவெறியும், சாதியுமே இந்நாட்டு மக்களின் சிந்தனையையும், நீதிமுறையையும் ஆக்கிரமித்திருக்கின்ற விந்தையான நிலையை நான் உணர்கின்றேன். வறுமையிலும், துயரத்திலும், ஏழ்மைப் பிடியிலும் சிக்கித் தவிக்கும் மக்களுக்கு உதவிக் கரம் கொடுப்பவர்கள் அந்தந்தச் சாதி, மதத்திற்குட்பட்டவர்களாகவே இருக்கிறார்கள். மனித இயலுக்குப் புறம்பான, தகாத செயலாக இது புலப்பட்டாலும், இந்த நாட்டில் இந்நிலையே நிலவி வருகின்றது என்பதை மறந்துவிட முடியாது.

இதிலிருந்து நீங்கள் ஒன்றைப் புரிந்து கொள்ள வேண்டும். அதாவது, பிற சமூகத் தாரோடு நெருங்கிய உறவினை ஏற்படுத்திக் கொள்ளாமல், வேறு மதங்களில் சேராமல் உங்களால் வெளியார் பலத்தைப் பெற முடியாது. இதன் உண்மைப் பொருள் என்னவென்றால், உங்களின் தற்போதைய மதத்தை விட்டு விலகி வேறு சமூகத்தாரோடு நீங்கள் ஒன்றாகக் கலந்திட வேண்டும். அப்படியின்றி, எவ்வழியிலும் நீங்கள் பலமுள்ளவராக ஆக முடியாது. நீங்கள் பலமில்லாதவர்களாக இருக்கின்றவரை, நீங்களும், உங்கள் எதிர்காலச் சந்ததியினரும், பரிதாப நிலையிலான வாழ்வையே நடத்த வேண்டியிருக்கும். ◆

## அம்பேத்கர் பொன்மொழிகள்

**ஆடுகளைத்தான் கோவில்கள் முன்பாக வெட்டுகிறார்களேயொழிய சிங்கங்களை அல்ல; ஆடுகளாக இருக்க வேண்டாம்; சிங்கங்களைப் போன்று வீறுகொண்டெழுமின்.**

**வெற்றியோ தோல்வியோ எதுவரினும் கடமையைச் செய்வோம். யார் பாராட்டினாலும், பாராட்டாவிட்டாலும் கவலை வேண்டாம். நமது திறமையும், நேர்மையும் வெளியாகும்போது பகைவனும் நம்மை மதிக்கத் தொடங்குவான்.**

**எவனொருவன் தானே சரணடையாமல், மற்றவர்களின் இச்சைப்படி செயல்படாமல், எதனையும் சோதனைக்குட்படுத்தி அறிவு வெளிச்சத்தில் அலசி ஏற்கின்றானோ அவனே சுதந்திர மனிதன்.**

**நான் வணங்கும் தெய்வங்கள் மூன்று. முதல் தெய்வம் அறிவு; இரண்டாவது தெய்வம் சுயமரியாதை; மூன்றாவது தெய்வம் நன்னடத்தை. இவற்றைத் தவிர வேறு தெய்வங்கள் எனக்கு இல்லை.**

**சமுதாயத்தில் இருக்கின்ற ஏற்றத் தாழ்வுகள் ஜனநாயகத்தை அழிக்கின்ற கரையான்கள் ஆகும். ஆதலால், மக்களின் நல்வாழ்விற்கான திட்டங்கள், செயல்முறைகள் ஆகியவற்றைக் கொண்டதே உண்மையான ஜனநாயகம் ஆகும்.**

**உங்களின் வறுமை உடன் பிறந்தது; தவிர்க்க முடியாதது, தீர்க்க முடியாதது என்றெண்ணுவது மடமை ஆகும். அடிமை வாழ்வுதான் கிடைத்த கதி என்ற எண்ணத்தைக் குழிதோண்டிப் புதையுங்கள்.**

**ஒரு லட்சியத்தை மேற்கொள்ளுங்கள். அதை அடைவதற்காக விடா முயற்சியுடன் உழைத்து முன்னேறுங்கள்.**

**சமூகத்தை உயர்த்த வேண்டும் என்ற விழுமிய நோக்கத்தில் உந்தப்படுபவரே உயர்ந்த மனிதர்.**

**முக்கியமான மூன்று விஷயங்களில் நாம் நம்மை அர்ப்பணித்துக் கொள்ள வேண்டும். அவை பொது ஒழுக்கம், முன்னேற்றத்தில் சிரத்தை, சிந்தனையில் மகத்தான புரட்சி என்பனவாகும்.**

**– அம்பேத்கர் பிறந்தநாள் : ஏப்ரல் 14**



Owned, Published and Printed by **V. Thalapathi,** Published from No. 13/5, Buddha Street, Rangarajapuram, Kodambakkam, Chennai - 24. and Printed at **DESIGNS PARK,** No. 22 weavers street triplicane, chennai-5, Editor: **V. THALAPATHI.**


வேலூர் மாவட்டம், அரக்கோணம் A.B.M நகரில் எழுந்தருளியிருக்கும்
அருள்மிகு ஸ்ரீ மாத்தம்மன் ஆலய
அஷ்டபந்தன மஹா கும்பாபிஷேக விழா அழைப்பிதழ்
அன்புடையீர்! வணக்கம்,
நிகழும் விஜய வருஷம் பங்குனி மாதம் 30-ம் தேதி (13-04-2014) ஞாயிற்றுக்கிழமை திரியோதசி திதி, உத்திரம் நட்சத்திரம் அமிர்தயோகம் கூடிய சுபதினத்தில் காலை 09-00 மணிக்கு மேல் 10-30 மணிக்குள்ளாக ரிஷப லக்னத்தில் ஸ்ரீ மாத்தம்மன் மற்றும் விநாயகர், முருகர் சுவாமிக்கு மஹா கும்பாபிஷேகம்
11-04-2014 வெள்ளிக்கிழமை
மாலை 5-30 மணி
புதிய விக்கிரகங்கள், ஸ்ரீ மாத்தம்மன், விநாயகர், முருகர், ஸ்ரீ வராகி கௌமாரி துர்கை அம்மன் கரிகோலம் நடைபெறும்.
12-04-2014 சனிக்கிழமை
காலை 9-00 மணி
கணபதி ஹோமம், நவகிரக ஹோமம், அனுக்ஞை, கோபூஜை, தனபூஜை மூலவர் ஜலாதிவாசம், சயனாதிவாசம், பூர்ணாஹுதி, தீபாராதனை, பிரசாதம் வழங்குதல்
மாலை 5-30 மணி
முதற்கால யாகபூஜை ஆரம்பம், வாஸ்துசாந்தி, பிரவேசபலி, மிருத்சங்கிரஹணம் அங்குரார்ப்பணம், ரக்ஷாபந்தனம், கலாகர்ஷணம், யாகசாலை, பிரவேசம், மஹாபூர்ணாஹுதி தீபாராதனை, பிரசாதம் வழங்குதல்
இரவு 9-10.00 மணி
அம்மன் பிரதிஷ்டை, அஷ்டபந்தனம் சாத்துதல்
13.04.2014
காலை 7.30 மணி
இரண்டாம்கால யாகபூஜை ஆரம்பம், மஹாசங்கல்பம், நாடிசந்தானம், தத்வார்ச்சனை, ஸ்பர்சாஹுதி, மஹா பூர்ணாஹுதி
காலை 9.45 மணி
கலசம் புறப்பாடு
காலை 10.10 மணி
கோபுர கலசம் கும்பாபிஷேகம்
காலை 10.20 மணி
மூலவர் மற்றும் பரிவாரம் மஹா கும்பாபிஷேகம்
பகல் 12.00 மணி
அன்னதானம் வழங்குதல்
மாலை 6.30 மணி
ஸ்ரீ மாத்தம்மன் உற்சவர் வாணவேடிக்கையுடன் திருவீதி உலா, சிறப்பு அலங்காரம்
இப்படிக்கு : ஆலய நிர்வாகிகள்
R.பத்மநாபன், M.L.T.,I.J.B., M.C. D.K.சுப்பிரமணி, DYFI.சீனிவாசன், M.அங்கையப்பா
G.P.நாகராஜன், D.மோகன், J.G.ரோசய்யா, L.வேணு, A.கலைகையப்பா
G.C.லட்சுமையப்பா, G.A.கோதண்டன், N.V.சுந்தர்ராஜ், G.R.பார்த்தசாரதி
ஆலய குருக்கள் : M.முரளி, R.முருகன், V.கணேஷ்குமார்
மற்றும்
ஸ்ரீ வெங்கடாஜலபதி பக்த ஜன சபா
கோல்டன் ரியல் எஸ்டேட்
Cell : 99448 11871, 76391 17707
Ph : 04177-231377